# இயல் 5

# இறையன்புவின் படைப்பாளுமை

# 5.இறையன்புவின் படைப்பாளுமை

1. முன்னுரை
2. படைப்பாளன்
    2.1. படைப்பாளுமை
        2.1.1. ஆளுமையின் அடித்தளம்
3. கட்டுரையில் ஆளுமை
    3.1. சொல்லும் திறன்
        3.1.1. சொல் விளக்கம்
        3.1.2. இசைக் கூறுகளால் விளக்குதல்
        3.1.3. அறிவியல் துணைகொண்டு விளக்குதல்
            3.1.3.1. நீரியல் அறிவியல்
            3.1.3.2. மூவகைப் புரட்சிகள்
            3.1.3.3. சோதிடமும் அறிவியலும்
        3.1.4. அனுபவ அறிவு
            3.1.4.1. சான்றோர்களின் கருத்துக்களை மேற்கோள் காட்டல்
            3.1.4.2. வாழ்வியல் நிகழ்வுகள்
        3.1.5. குட்டிக் கதைகள்
            3.1.5.1. புராணக் கதைகள்
            3.1.5.2. திரைப்படங்களின் சுருக்கத்தைக் கூறல்
        3.1.6. பழமொழிகளும் பொன் மொழிகளும்
        3.1.7. நகைச்சுவை
        3.1.8. உவமைகளும் உதாரணங்களும்
        3.1.9. வேறுபடுத்திக் காட்டல்
        3.1.10. இலக்கியங்களை எடுத்தாளல்
4. கவிதையில் ஆளுமை
    4.1. புதுக்கவிதை – விளக்கம்
        4.1.1. காதலின் மொழி கவிதை
        4.1.2. தலைவன் அறிமுகம்
        4.1.3. காதலின் உன்னத நிலை
        4.1.4. காதலில் ஜெயிக்கும் வழி
    4.2. ஹைக்கூ
    4.3. மொழி நடை
        4.3.1. சொல்லாட்சி
            4.3.1.1. இயைபு
        4.3.2. சொற்சேர்க்கை
            4.3.2.1. அடைகள்

4.3.2.2. இணையெதிர்ச் சொற்கள்
4.4. அழகியல் அனுபவம்
4.4.1. இயற்கை
4.4.2. படிம அழகியல்
4.4.3. குறியீட்டு அழகியல்
4.4.4. அங்கத அழகியல்
4.5.கவிதை – அணி
4.5.1. மோனை
4.5.1.1. சீர் மோனை
4.5.1.2. அடி மோனை
4.5.2. எதுகை
4.5.3. முரண்
4.6. அணி
4.6.1. வினை உவமை
4.6.1.1. பண்பு உவமை
4.6.2. உருவகம்
5. சிறுகதைகளில் ஆளுமை
5.1. பாத்திரப் படைப்பு
5.2. மூவகைச் சிறுகதைகள்
5.2.1. கதைக் கோப்புக் கதை
5.2.2. பாத்திரப் படைப்புக் கதை
5.2.3. உணர்ச்சி பதிவுக் கதைகள்
5.3. சிறுகதைகளில் உத்திகள்
5.4. மனிதநேய வெளிப்பாடு
6. குறுந்தகவல் கதைகள்
6.1. சொல்லடுக்கு
6.2. முரண்
6.3. பேச்சு வழக்குச் சொற்கள்
7. இலக்கியத்தின் கூறு – நாவல்
7.1. நாவல் - விளக்கம்
7.2. இறையன்புவும் நாவலும்
7.3. புதினப் பெயர்கள்
7.4. கதைக்கரு
7.4.1. ஆத்தங்கரை ஓரம்
7.4.2. சாகாவரம்
7.4.3. அவ்வுலகம்
7.5. கதைப் பாத்திரங்கள்

7.5.1. ஆத்தங்கரை ஓரம்- சிமன்
7.5.2. சாகாவரம் - நசிகேதன்
7.5.3. அவ்வுலகம் -திரிவிக்ரமன்
7.6. கதை கட்டமைப்பு
7.7. மொழி நடை
7.8. படைப்பில் உத்திகள்
7.8.1. உரையாடல் உத்தி
7.8.2. பெட்டிச் செய்தி – உத்தி
8. தொகுப்புரை

# இறையன்புவின் படைப்பாளுமை

## 1.முன்னுரை

எண்ணப் பரிமாற்றத்திற்குப் பல வழிகள் உண்டு. ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு கோணத்தில் அது வெளிப்படுகின்றது. எழுதுவது எல்லோருக்கும் சிறப்பாக வாய்க்கும் என்று சொல்லிவிட முடியாது. ஒரு சிலருக்கே அது கைகூடுகின்றது. இறையன்பு எழுத்துலகில் தனக்கெனத் தனியிடத்தைப் பிடித்து, வாசகர் உள்ளங்களில் கருத்து விதைகளை விதைத்து நல்ல எதிர்காலம் என்னும் அறுவடைக்கு வழிவகுக்கின்றார். ஆளுமைச் சிந்தனை உடைய அரசு உயர்அலுவலர்களிடையே, சிந்தனை ஆளுமை மிக்கவர் இறையன்பு .

இறையன்பு சிறந்த படிப்பாளி, சிறந்த படைப்பாளி, சிந்தனையாளர், ஆட்சியர் எனப் பன்முகப் பரிமாணம் கொண்டவர். வாசிக்கிற படிப்பறிவும் வாழ்கின்றபட்டறிவும்அவரை மிகச்சிறந்த மனிதநேயவாதியாக ஆக்கியிருக்கின்றன.

> **"ஆயிரக் கணக்கான இளைஞர்களுக்கும் இளைஞிகளுக்கும்**
> **இவர் ஒரு கலங்கரை விளக்கு. இலட்சிய அடையாளம்"** [1]

என்கிறார் பதிப்பாசிரியர் வேலாயுதம்.

படித்து சாதனை புரிந்தவர், படைத்து சாதனை புரிவது வாசகர்களுக்கு வரப்பிரசாதம். பிறமொழி நூல்களைக் கற்று அவற்றைப் பொருத்தமான இடங்களில் தமிழில் தருவது, வாசகர்களுக்குப் பல நூல்களைப் படித்த அனுபவத்தைத் தருவதாய் அமைகின்றது. இறையன்பு விரிவாக வாசித்து, சுயமாக யோசித்து, வாசித்ததையும் யோசித்ததையும் சிந்தனை மின்னலாக முறைப்படுத்தி வாசகனிடம் கொண்டு சேர்க்கின்றார்.

## 2. படைப்பாளன்

எண்ணமும் எமுத்தும் ஓர் எழுத்தாளனுக்கு ஒன்றாகவே அமைய வேண்டும். எழுதுகின்ற ஒவ்வொரு எழுத்தும் சமுதாயத்தில் எழுச்சியை ஏற்படுத்த வேண்டும். எழுத்தும் இலக்கியமும் நமக்கு அறிவையும் அனுபவத்தையும் கூடுதலாக உற்சாகத்தையும் வழங்குகின்றன என்று கூறும் இறையன்பு,

> **"பெரிய அலை வந்து என்னைக் குலுக்குகின்ற போதெல்லாம்**
> **என் வாசிப்பும் எழுத்தும் நான் நிலைகுலைந்து**
> **விடாதபடி பார்த்துக்கொள்கின்றன"** [2]

என்கிறார்.

ஒரு படைப்பாளனின் எண்ணங்களும் எழுத்துக்களும் வாசகரிடையே எத்தகைய மாற்றத்தை உண்டு பண்ணும் என்பதை இறையன்பு களஞ்சியம் வழி தெரிந்து கொள்ளலாம்.

## 2.1. படைப்பாளுமை

இறையன்புவின் படைப்புகள் சமூக அக்கறையுடன் இலங்குவதோடல்லாமல், கருத்து வளம் மிக்கதாயும், தேர்ந்த சொல்லாட்சி உடையதாயும் விளங்குகின்றன. தனது படைப்புகள், மனிதர்களிடம் சில விழுமியங்களை உருவாக்குபனவாக இருக்க வேண்டும் எனும் நோக்கத்தில் எழுத்துலகில் தடம் பதித்தவர் இறையன்பு. இறையன்புவின் படைப்புகள் எனும் சாளரம், உலக இலக்கியங்களைப் பார்க்க உதவுவதோடு அவற்றை படிக்க வேண்டும் என்ற ஆர்வத்தைத் தூண்டுவதாயும் அமைந்துள்ளது. மனிதர்கள் மனிதர்களாக வாழ வேண்டும் எனும் விருப்பத்தை அடித்தளமாகக் கொண்ட இறையன்புவின் படைப்புகள், இளைஞர்களுக்குத் தன்னம்பிக்கை ஊட்டுவதாய் அமைந்துள்ளன. இளைஞர்களின் ஆற்றலும், தனித்தன்மையும் சமுதாயத்திற்குப் பயன்படவேண்டும் எனும் நோக்கத்தினாலேயே இறையன்பு, தனது நேர்மறைச் சிந்தனைகளால் அவர்களை உயர்த்த, எழுத்து வேள்வி செய்து வருகின்றார்.

### 2.1.1. ஆளுமையின் அடித்தளம்

ஒருவரின் சமூக வாழ்நிலையும் வளர்ந்த சூழல் மற்றும் சுற்றுப்புறங்களின் பாதிப்புமே எழுத்திற்கான அடிநாதமாகின்றது. இறையன்புவின் கணீர் பேச்சுக்கும் தெளிந்த நீரோடை போன்ற அவரின் மொழி நடைக்கும் அவரது குடும்பமும் தந்தையுமே ஆளுமையின் அடித்தளமாக அமைந்தனர். தந்தையிடம் இருந்து தேடல் பண்பு உருவானது. மேடைப் பேச்சுக்கு அவரது தந்தையே முன்மாதிரியாய்த் திகழ்ந்தார்.

மரபணு மார்க்கமாகவும், வலுவான அடித்தளத்தின் விளைவாகவும், வளர்ப்பு காரணமாகவும், சீரான முயற்சியாலும், இடைவிடா உழைப்பினாலும் இறையன்பு பன்முக ஆளுமை கொண்டவராக உயர்ந்துள்ளார்.

இறையன்புவின் படைப்புலகம் பரந்துபட்டது. தெளிந்த கட்டுரையாளனாக,தேர்ந்தபடைப்பிலக்கியவாதியாக,செறிந்த சிந்தனையாளனாக, அழகியல் போற்றும் கவிஞனாக, கதை சொல்லியாக, சமூக அவலங்களைத்

தோலுரித்துக் காட்டும் எழுத்தாளராக, புதைந்து போன வரலாற்று உண்மைகளை நினைவில் நிறுத்தும் பேராசிரியனாக இறையன்பு வெளிப்படுத்தும் பரிமாணங்கள் எண்ணற்றன. இங்ஙனம் வெவ்வேறு தளங்களில் ஆளுமை செலுத்துகின்ற இறையன்புவின் படைப்பாளுமையை கட்டுரை, கவிதை, சிறுகதை, நாவல் என்ற தளங்களில் ஆய்வதே இவ்வியலின் நோக்கமாகும்.

## 3. கட்டுரையில் ஆளுமை

இறையன்புவின் எல்லா நூல்களுமே இனியவற்றைச் சொல்லக் கூடியன. பொருளும் இனிமை; பொழியும் விதமும் அருமை. அவரின் கட்டுரைகள் சுருங்கச் சொல்லி விளங்க வைக்கக் கூடியன.

**“இறையன்புவின் கட்டுரைகள் சிந்தனையைத் தூண்டுவன.அவரது கருத்துக்களைப் படித்து இரசிக்கலாம்; இரசித்துப் படிக்கலாம்”[3]**

என்பார் பேராசிரியர் நம். சீனிவாசன்.

பரந்துபட்ட பொருளில், பேசவும் எழுதவும் செய்கின்ற இறையன்புவுக்குத் தலைப்புகளைத் தேர்ந்தெடுக்க முழுச்சுதந்திரம் கிடைத்ததால், அவர் தேர்ந்தெடுத்த தலைப்புகள் வித்தியாசமாய் அமைந்தன. இதனை, ஏழாவது அறிவு எனும் கட்டுரைத் தொகுப்பில்- சோளக்காட்டுப் பொம்மை, இன்று புதிதாய்ப் பிறந்தோம், இறைவன் இறந்து விட்டான், போரின்றி வெற்றி, கல்வி கரையில போன்ற தலைப்புகளின் வாயிலாகவும், ஒரு கை ஓசை, மக்கட் பண்பு, சப்திக்காத மௌனம், முத்துச்சிப்பி போன்ற தலைப்புகளை உள்ளொளிப் பயணம் என்ற கட்டுரையின் மூலமாகவும் அறியமுடிகிறது. ஓடும் நதியின் ஓசை என்ற கட்டுரைத்தொகுப்புகளின் வழி- உயிருள்ள தோழர்கள், உதிர்ந்த உறவுகள், ஆடம்பர எளிமை, பிரிவினைத் தவிர்ப்போம் போன்ற தலைப்புகளையும், மென்காற்றில் விளை சுகமே என்ற நூலின்வழி-பார்வை விழிகளில் இல்லை, ஒழுகுகின்ற பானை போன்ற தலைப்புகளையும் அறியமுடிகிறது. எப்போதும் இன்புற்றிருக்க என்ற நூலில் நிரந்தரமாகுமோ நிம்மதி, இரவல் மகிழ்ச்சி போன்ற தலைப்புகளையும், வாழ்க்கையே ஒரு வழிபாடு நூலுள் மௌன அர்ச்சனை, கலப்பையே வேதமாய், சாந்தமே சந்நிதி போன்ற வித்தியாசமான தலைப்புகள் இடம்பெற்றிருப்பதையும் காணமுடிகிறது.

## 3.1.சொல்லும் திறன்

தாம் சொல்ல நினைக்கும் கருத்துக்களைக் கேட்போரின் மனங்கொள்ளும் வகையில் எடுத்துரைப்பதே படைப்பாளரின் வெற்றியாகும். அவ்வகையில் இறையன்பு தன் கருத்துக்களைப் படிப்போருக்கு உணர்த்துவதற்காகச் சில உத்திகளைக் கையாளுகின்றார். அவற்றை,

- சொல் விளக்கம்
- இசைக் கூறுகளைக் கூறி விளக்குதல்
- அறிவியல் துணைகொண்டு விளக்குதல்
- தன் பட்டறிவைப் புலப்படுத்தி விளக்குதல்
- சான்றோரின் கருத்தை மேற்கோள் காட்டல்
- சான்றோரின் வாழ்க்கையில் நடந்த நிகழ்ச்சிகளை எடுத்துக்காட்டுதல்
- குட்டிக் கதைகள்
- புராணக் கதைகள்
- திரைப்படங்களின் சுருக்கத்தைக் கூறல்
- பழமொழிகள், பொன்மொழிகளை எடுத்தாளல்
- நகைச்சுவை
- உவமைகள்
- வேறுபடுத்திக் காட்டல்
- இலக்கியங்களை எடுத்ததாளல்

போன்ற பிரிவுகளுக்குள் வகைப்படுத்தலாம்.

### 3.1.1. சொல் விளக்கம்

திருப்பாவையில் இடம்பெற்றுள்ள சில சொற்களுக்கு இறையன்பு அளித்த விளக்கம் பொருத்தமாக இருப்பது மட்டுமல்லாமல் சிந்தித்து உணரத் தக்கதாகவும் உள்ளது.

> **“சேவித்தல் என்பது,ஒப்படைப்புடன் தொடர்பு கொண்டது.**
> **ஒருமையைக் குறிப்பது.வணங்குவது இருமையைக் குறிப்பது.**
> **இருமை மனத்தின் இருண்மை. ஒருமை ஆன்மாவின் பெருமை”** [4]

என்று கூறுவதன் மூலம் சேவித்தலுக்கும் வணங்குதலுக்கும் இடையேயான வேறுபாடும் விளக்கமும் விவரிக்கப்பட்டுள்ளது.

தியானம், பிரார்த்தனைக்கு இடையே உள்ள நுட்பத்தைக் கூறுகையில்,

**"பிரார்த்தனை என்பது கூட்டமாக நிகழ்வது. குறிக்கோள் உடையது. தியானம் என்பது தனியாக நிகழ்வது. கும்பல் வேறு; கூட்டம் வேறு. குறிக்கோள் இல்லாத பொழுது கும்பல் உருவாகிறது. கூட்டுப் பிரார்த்தனைஅரைமனதுடன் கலந்து கொள்பவர்களையும் முழு மனத்தினராக மாற்றுகிறது"[5]**

என்று கூறுவதன் மூலம் கும்பல், கூட்டம் இரண்டிற்குமான உண்மைப் பொருளைத் தெரிய வைக்கின்றார் இறையன்பு.

கர்ப்பக்கிரகம் என்ற சொல்லுக்கு விளக்கம் கூறுமிடத்து,

**"இறைவன் இருக்குமிடம் கர்ப்பக்கிரகம் என்றழைக்கப்படுகிறது. இறைவன் முன் நாம் அனைவரும் குழந்தைகள். தூங்குகிற பொழுது கூட கருப்பைக்குள் இருக்கும் கருவைப் போல கைக்கால்களைக் குறுக்கிக் கொண்டு சிசுவாகி விடுகிறோம். அதே மனநிலையில் இறைவனை வேண்ட வேண்டும் என்பதைத் தான் அவன் இருக்கும் இடத்தைக் கர்ப்பக்கிரகம் என்றழைத்தனர்"[6]**

என்று விளக்குகின்றார் இறையன்பு.

## 3.1.2.இசைக் கூறுகளால் விளக்குதல்

எல்லோரும் கலைஞர்களாக இருக்க முடியாது. ஆனால் இரசிகர்களாக இருக்க முடியும். அன்றாடப் பணிகளை ஈடுபாட்டுடன் செய்யும் பொழுது அது கலையாக மாறுகின்றது.

**"செய்கின்ற சமையலைக் கலையாக்கலாம்**
**வெள்ளையடித்தலை ஓவியமாகக் கருதலாம்**
**துணி துவைப்பதை நடன அசைவாக்கலாம்**
**வீடு பெருக்குவதைச் செய்யும் போது**
**துடைப்பமே தூரிகையாகலாம்"[7]**

இப்படி நம்மை ஒவ்வொரு பணியிலும் கலைஞனாகக் கருதினால், அது முற்றுப்பெறும் பொழுது கலை வடிவமாகக் காட்சியளிக்கும். தியானம் செய்த திருப்தி கிடைக்கும் என்கிறார் இறையன்பு.

இயற்கையே இசையாகக் காட்சியளிக்கின்றது. இதனை,

**"மழைத்துளிகளின் ஓசையில்**
**சருகுகளின் சலசலப்பில்**
**பறவைகளின் பாடலில்**
**அலைகளின் ஆர்ப்பரிப்பில்**
**தென்றலின் வருடலில்" [8]**

இசைப் பிரவாகம் எடுக்கிறது என்கிறார் ஆசிரியர்.

## 3.1.3. அறிவியல் துணைகொண்டு விளக்குதல்

இந்திய ஆட்சிப்பணி அலுவலரான இறையன்பு சொல்லேர் உழவராகவும் எழுத்தேர் உழவராகவும் விளங்குவது தனிச்சிறப்பு. வேளாண்மையியல் கற்ற இறையன்பு, உணவின் மகத்துவத்தை உணர்ந்தவர். போதும் என்று நிறைவைத் தரக்கூடியது உணவு மட்டுமே. அளவறிந்து உண்டு, உண்டது செறித்த பின் பசித்துப் புசித்தால் தீங்கில்லை என்பதை,

**"மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது**
**அற்றது போற்றி உணின்" [9]**

என்று குறளும் எடுத்தியம்புகின்றது. "அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சாக" மாறிவிடும். அமிர்தமே அப்படி என்றால் உணவு? ஆகவே "சாதமே பிரசாதமாய்" என்ற கட்டுரையில் மனிதன் உணவு உண்ணும் முறையை அறிவியல் முறையில் விளக்குகின்றார் இறையன்பு.

**"நம் உணவை மூளையின் ஹைபோதாலமஸ் என்ற பகுதிதான் தீர்மானிக்கிறது. அதனால்தான் இரைப்பையை அறுவை சிகிச்சை மூலம் அகற்றிய பின்னும் சிலர் பசிப்பதாகப் புகார் செய்கின்றனர். தன் உடலைக் கச்சிதமாக வைத்திருக்கும் பொருட்டு பட்டினி கிடந்து எலும்புக் கூடு போல ஆகிவிடுவது ஒருவித மனச்சிதைவு. நிறைய சாப்பிடும்ஆசையில் சாப்பிட்டதைக் கைவிட்டு வாந்தியெடுக்கும் மனிதர்களுக்கு பிறழ்வு" [10]**

என்று மனிதர்களின் மனவியலையும் அறிவியலையும் எடுத்துக் காட்டுகின்றார் இறையன்பு.

### 3.1.3.1. நீரியல் அறிவியல்

மழை, கம்பியாகப் பொழிவதில்லை. அதன் பொழிவில், இடைவெளி இருக்கிறது என்ற அறிவியல் உண்மை "சர அம்பை" மழைக்கு உவமையாக்குவதில்

வெளிப்படுகின்றது. சரமழை என்பதற்கு நுட்பமான அறிவியல் விளக்கம் அளிக்கிறார் இறையன்பு."வாழ உலகினில் பெய்யாய்" என்ற தொடரை விளக்கும்பொழுது பேய் மழையாகப் பெய்யாமல், நாங்கள் வாழ உலகில் பெய்ய வேண்டும் என்று விளக்குகிறார்.

**"மழை மண்ணிற்குத் தாய்ப்பால். எல்லா உயிர்களுக்கும் அதுவே ஜீவ ஆதாரம். சிறிது சிறிதாக இடைவெளி விட்டு நிறைய நாட்கள் பெய்யும் மழை உயிர்களைக் காக்கிறது. பயிர்களைப் பாதுகாக்கிறது. பூமி தன் வயிற்றுள் பத்திரப்படுத்தித் தேவையான போது தருகிறது. செந்நெல் வயல்கள், வள்ளல் பசுக்கள், துள்ளல் மீன்கள் எல்லாம் அளவாகப் பெய்கின்ற மழையினால் சாத்தியம்".** [11]

எனவே தான் கோதை நாச்சியாரும் மாதம் மும்மாரி பெய்ய வேண்டுகிறார் என்று விளக்கமளிக்கிறார் இறையன்பு.

### 3.1.3.2. மூவகைப் புரட்சிகள்

**"மழையினால் மூவகைப் புரட்சிகள் இயல்பாக உண்டாகின்றன. செந்நெல் வயல்கள் என்பது பசுமைப் புரட்சி. வள்ளல் பெரும் பசுக்கள் என்பது வெண்மை புரட்சி. ஊடு கயல்கள் என்பது நீலப்புரட்சி"** [12]

என்று மூவகைப் புரட்சிகளை அன்றே கோடிட்டு ஆண்டாள் காட்டியுள்ளதாக விளக்கமளிக்கின்றார் இறையன்பு.

இரசனைவாதிகள் மழை பெய்ததும் மண்ணின் நறுமணத்தை நுகர்ந்து மகிழ்வர். இறையன்புவோ எதனால் இந்த நறுமணம் தோன்றுகிறது என்பதையும் மண்ணின் தன்மைக்கேற்ப மக்களின் தன்மையும் வேறுபடுவதையும் விளக்குகின்றார்.

**"மண்ணின் மணம் அதன் நுண்ணுயிரியால் விளைவது. மண்வாசனை ஆக்டினோமைசிட்ஸ் மூலம் மழை விழுந்ததும் ஏற்படுவது. ஒவ்வொரு மண்ணுக்கும் ஒரு குணம் உண்டு. கரிசல் மண்ணில் கடின உழைப்பும், வண்டல் மண்ணில் வளமும், செம்மண்ணில் சகிப்புத் தன்மையும் உண்டு என்பதற்கு அங்கு வாழும் மக்களே சாட்சி"** [13]

என்கிறார்.

### 3.1.3.3. சோதிடமும் அறிவியலும்

ஆண்டாள் கண்ணனைத் துயில் எழுப்புகையில், கண்ணன் தனது அருட்பார்வையைக் கொண்டு தங்களைக் காண வேண்டும் என்பதை,

**"திங்களும் ஆதித்தியனும் எழுந்தாற்போல்**
**அங்கணிரண்டும் கொண்டு எங்கள் மேல்**
**நோக்குதியேல்"** [14]

என்று கூறுகின்றாள். இதற்கு விளக்கம் கூறுமிடத்து இறையன்பு,

**"சோதிடக் கட்டங்களில் சூரியனும் சந்திரனும் ஒரு வீட்டிலிருந்தால் ராஜயோகம். மலர வைப்பது சூரியன். குளிர வைப்பது சந்திரன். ஆரோக்கியத்தைத் தருவது சூரியன். இன்பத்தைத் தருவது சந்திரன். வளத்தைத் தருவது சூரியன். உறவைத் தருவது சந்திரன்."** [15]

என்கிறார். அதனால் தான் பாரதியும், கண்ணம்மாவைச் "சுட்டும் விழிச் சுடர்தான் கண்ணம்மா- சூரிய சந்திரரோ" என்று விளித்தார். ஆன்மீகமும் அறிவியலும் இணைய வேண்டும். அப்பொழுது தான் மானுடம் உயரும் என்பதில் அயராத நம்பிக்கை கொண்டவராக இறையன்பு இருக்கின்றார்.

### 3.1.4.அனுபவ அறிவு

உலகிலேயே அனுபவ அறிவுதான் வாழ்க்கைக்கு மிகவும் தேவை. ஏட்டுக் கல்வி கறிக்கு மட்டுமல்ல; எதற்கும் உதவாது என்பது நாடறிந்த உண்மை. விண்ணையும் மண்ணையும் தவிர நாம் படிக்க வேண்டிய பள்ளிகள் வேறெதுவுமில்லை. இறையன்பு, தனது அனுபவக் கருத்துக்களை வாய்ப்பு கிடைக்கும் இடமெல்லாம் விதைத்துச் செல்கின்றார். வேளாண்மை படித்துக் கொண்டிருந்தபொழுது ஏற்பட்ட அனுபவத்தை அவர் தமது நூலுள் பதிவு செய்துள்ளார்.

**"நான் வேளாண்மை படித்துக் கொண்டிருந்த போது பட்டாம் பூச்சிகளைப் புழுக்களாக இருக்கும் போதே பிடித்து, அவை வண்ணத்துப் பூச்சிகளாக உருமாறும்வரை வளர்க்கவேண்டிய வகுப்பு ஒன்று உண்டு. ஆரஞ்சு நிறத்தில் அழகாக ஒரு பட்டாம்பூச்சி இருக்கும். அதைத்தான் பல இடங்களில் ஓவியமாகத் தீட்டியும் வைத்திருப்பார்கள் எருக்கஞ்செடியில் ஒரு புழுவைப் பிடித்து அந்த எருக்கன்**

**இலைகளைக் கொடுத்து வளர்க்க வேண்டிய சூழல் ஏற்பட்டது. அந்தப் புழுவைக் கையில் எடுக்கவே அருவருப்பு. அந்தப் புழு கூட்டுப் புழுவானது.அதிலிருந்து அழகான ஆரஞ்சு நிறப்பட்டாம்பூச்சி வெளிவந்தது"** [16]

என்று தன் பட்டறிவை விளக்கியுள்ளார் இறையன்பு.

## 3.1.4.1. சான்றோர்களின் கருத்துக்களை மேற்கோள் காட்டல்

சொல்ல வருகின்ற கருத்துக்களை படிப்பவர்கள் தெளிவாகப் புரிந்துகொள்ள சான்றோர்களின் நல்லுரைகளை மேற்கோளாக இறையன்பு எடுத்தாண்டுள்ளார். மனத்தில் அழுக்குகளை வைத்துக் கொண்டு வெளியே செய்கிற ஒப்பனைகள் வெறும் வெளிவேடமே என்பதை,

**"கருப்பு வளையல் அணிந்து**
**குனிந்து வளைந்து ஒருத்தி**
**பெருக்கிவிட்டுப் போனாள்**
**வாசல் சுத்தமாச்சு**
**மனசு குப்பையாச்சு"** [17]

என்று கவிஞர் கல்யாண்ஜியின் கவிதை வரிகளைக் கொண்டு எடுத்துக் காட்டுகின்றார்.

ஆத்திகர், நாத்திகர் பற்றி பேசுகையில் கபீரைத் துணைக்கழைக்கும் இறையன்பு,

**"மற்றவர்களின் துன்பத்தை உணர்பவர்களே ஆத்திகர்கள், அதை உணர முடியாதவர்கள் நாத்திகர்கள்"** [18]

என்று கபீர் கூறுவதாகக் கூறுகின்றார். ஆடைகளைப் பற்றிக் குறிப்பிடும் பொழுது,

**"உடலின் அவயவங்களை மறைப்பதைக் காட்டிலும் அவற்றை வெளிக்காட்டவே ஆடைகள் அதிகம் பயன்படுகின்றன"** [19]

என்று கலீல் கிப்ரான் குறிப்பிடுவதைச் சுட்டுகின்றார்.

வேதங்களிலும் உபநிடதங்களிலும் ஈடுபாடு கொண்ட இறையன்பு, வாழ்கையே ஒரு வழிபாடு என்ற நூலில், பகவத்கீதை ( ப. 140) கௌஷிதகி உபநிடதம் (ப. 147) கேனோபநிடதம் (ப. 148) கதா உபநிடதம் (ப. 148) முண்டக உபநிடதம் (ப. 35, 49) தைத்திரிய உபநிடதம் (ப. 48) சந்தோக்கிய உபநிடதம் (ப. 52)

கபோ உபநிடதம் (ப. 66) போன்ற உபநிடதங்களிலிருந்து சான்றுகளைக் காட்டுகின்றார்.

திருக்குறளை, உரைநடை வடிவிலும் குறள் வடிவிலும் எடுத்துக்காட்டும் இறையன்பு, திருமூலர் (149) நாவுக்கரசர் (129) சேக்கிழார் (145) கம்பர் (98, 22, 23) தாயுமானவர் (ப. 55) ஞானசம்பந்தர் (ப. 163) காந்தியடிகள் (ப. 140) ஆகியோரின் மேற்கோள்களை "நெஞ்சைத் தொட்டதும் சுட்டதும்" நூலுள் எடுத்துக் காட்டுகின்றார்.

நேர்மையாக இருந்து கூழ் குடிப்பது தவறுகள் செய்து பால்பாயசம் சாப்பிடுவதை விட மேன்மையானது என்று கூறும் இறையன்பு,

**"பெரியார் சின்ன வயதில் மூட்டை தூக்கிய அனுபவத்தைப் பற்றிக் குறிப்பிடும் பொழுது நான் மூட்டைத் தூக்கியபொழுது பாரத்தினால் முதுகு குனிந்திருக்குமே தவிர அவமானத்தால் தலை குனிந்ததில்லை"** [20]

என்று பெரியாரின் கூற்றைச் சுட்டிக்காட்டுவார்.

இசையுணர்வு இல்லாத மனிதனின் இழிவைக் குறிக்க, சேக்ஸ்பியரின் நாடகப் பகுதிகளை மேற்கோள் காட்டுகின்றார் இறையன்பு.

**"இசையில்லாத மனிதன் ஆன்மீகவாதியாக மட்டுமல்ல, மனிதனாகக் கூட இருக்க முடியாது"** [21]

என்று கூறும் சேக்ஸ்பியர், காளியாஸ் எனும் கதாப்பாத்திரத்தைப் பற்றிக் கூறும் பொழுது,

**"அவன் இசையை நேசிக்காதவன். அவனை நம்பக் கூடாது"** [22]

என்று ஜூலியஸ் சீஸர் கூறுவது போல படைத்திருப்பார் என்று குறிப்பிடுகிறார் இறையன்பு.

### 3.1.4.2. வாழ்வியல் நிகழ்வுகள்

இறையன்பு தான் சொல்ல வந்த கருத்தை, மக்களின் உள்ளத்தில் பதிய வைக்க சான்றோர்களின் வாழ்வில் நடந்த நிகழ்வுகளை எடுத்துக் காட்டியுள்ளார். இதன் மூலம் படிப்பவர் உள்ளத்தில் தாமும் அச்சான்றோரின் வாழ்க்கை வரலாற்றைப் படிக்க வேண்டும் அவர்களைப் பின்பற்றி வாழ வேண்டும் என்ற ஆர்வத்தைத் தூண்டுகின்றார்.

புத்தரும் மகாவீரரும் ஒரே காலகட்டத்தில் வாழ்ந்தவர்கள். ஒருமுறை ஒரே இடத்தில் அவர்கள் சந்தித்தபொழுது, இருதரப்புச் சீடர்களும் அவர்கள் என்ன பேசுவார்கள் என ஆர்வமாக காத்திருந்தனர். ஒரு மணி நேரத்திற்கும் மேலாக மௌனமே நிலவியது. அதே போல் கபீரும் ஃபரீதும் சந்தித்த பொழுது மௌனமே அவர்கள் மொழியாக இருந்தது. தாமஸ் கார்லைல் மற்றும் பென்னிஸனும் சந்தித்த பொழுதும் அங்கு மௌனமே ஆட்சி செலுத்தியது. சிவயோக சுவாமிகளும் இரமண மகரிஷியும் சந்திந்த பொழுதுங்கூட மௌனத்தாலேயே பேசிக் கொண்டனர். இந்நிகழ்ச்சியை விவரித்த ஆசிரியர்,

**"மௌனத்தின் மூலம் புரிந்து கொள்ள முடியும் என்ற போது**
**கனத்துத் தொங்கும் வார்த்தைகள் எதற்கு?"** [23]

என்று வினவுகின்றார்.

**"மற்றவர்களைச் சுரண்டி ஈட்டுகின்ற பணத்தில் தயாரிக்கப்படும் பாயசத்தில் முந்திரி இருக்கலாம்; முக்கியத்துவம் இருக்காது. நெய் இருக்கலாம்; மெய் இருக்காது. மாவு இருக்கலாம்; சுவை இருக்காது. அது நைவேத்தியமாக அமையாது; நச்சுப் படையலாகவே விளங்கும்"** [24]

என்ற கருத்தை விளக்க வந்த இறையன்பு அதனைக் குருநானக்கின் வாழ்வில் நிகழ்ந்த நிகழ்ச்சி மூலம் சுட்டிக்காட்டியுள்ளார்.

சொல் வலிமையானது. ஒரு சொல் மற்றவர்கள் வாழ்வைப் புரட்டிப் போடும் அளவிற்கு வலிமை வாய்ந்ததாகும். சொற்களை கவனமாகக் கையாள வேண்டும் என்று சொல்ல வந்த இறையன்பு, ஸாரினாமரியா என்ற பெண்ணின் வாழ்வில் நடந்த நிகழ்ச்சியைக் குறிப்பிடுகிறார்.

காற்புள்ளி இடம் மாறியதால் ஒருவர் உயிர்க் காப்பாற்றப்பட்ட வரலாற்றை இறையன்பு சுட்டுகின்றார். ஸாரினாமரியா என்ற பெண் தன் கணவனை குற்றவாளி எனக்கூறி மன்னர் அலெக்ஸாண்டர் சிறைக்கு அனுப்பும்பொழுது,

**"மன்னிக்க முடியாது, சைபீரியாவுக்கு அனுப்புக!"**
**(Pardon impossible, to be sent to Siberia)**
**என்பதை மாற்றி "சைபீரியாவுக்கு அனுப்ப முடியாது,**
**மன்னிக்க" (Pardon, impossible to be sent to Siberia)**
**எனத் திருத்தி விடுவித்த கதை வரலாறு ஆனது"** [25]

என்பதை இறையன்பு குறிப்பிடுகின்றார்.

நேர்மை பற்றி பேசுகையில், சட்டத்தினாலும் சமூகத்தினாலும் விளைகின்ற நேர்மை ஒட்டவைத்த மீசையைப் போல எப்பொழுது வேண்டுமானாலும் உதிர்ந்து விடும். மாறாக உள்ளத்திற்குள் ஆழமாக விதைக்கப்படும்பொழுது, எந்தச் சூழலிலும் நேர்மை தவறால் நடக்க முடியும் என்று குறிப்பிட்ட இறையன்பு,

> **"சக்ரவர்த்தி இராஜ கோபாலாச்சாரியார், அரசுப் பணிகளுக்கு ஒரு பேனாவையும் சொந்தப் பணிகளுக்கு வேறொரு பேனாவையும் பயன்படுத்துவார்"[26]**

என்பதைச் சுட்டிக்காட்டியுள்ளார்.

## 3.1.5. குட்டிக் கதைகள்

ஓராயிரம் விளக்கங்கள் கூறியும் விளங்காத கருத்தை ஒரு கதை சாதித்துவிடும் என்பர். தான் சொல்ல வருகின்ற கருத்தை விளக்குவதற்கு பல்வேறு உருவகக்கதைகள், குட்டிக்கதைகள் போன்றவற்றை இறையன்பு கையாளுகின்றார்.

கருணை, திருடனைக் கூட திருத்தி சீடனாக்கி விடும். கடுமை நல்லவனைக் கூட வருத்தித் திருடனாக்கி விடும் என்பதற்கு "கோஜூன்" என்கிற துறவியின் கதையை எடுத்தியம்புகின்றார்.

> **"தன்னுடைய இடத்திற்கு வந்த திருடனை, என்னைத் தொல்லை செய்யாமல் மேசைக்குள் பணம் இருக்கிறது எடுத்துக் கொள் என்று கூறுகிறார் துறவி. சில நாட்கள் கழித்துத் திருடன் மாட்டிக்கொள்கிறான். கோஜூனுக்கு எதிராக நிகழ்ந்த திருட்டை ஒத்துக் கொள்கிறான். ஆனால் கோஜூன் நானாக மனமுவந்து இவனுக்குப் பணம் தந்தேன். அதனால் இவன் என்னைப் பொறுத்தவரை திருடனல்ல என்று கூறுகிறார். மனந்திருந்திய திருடன் அவரின் சீடனாகிறான்". [27]**

எளிமையின் சிறப்பை விளக்க, சூஃபி கதையைச் சுட்டிக் காட்டுகின்றார் இறையன்பு. மலையில் இருந்த துறவியின் இல்லத்திற்கு, இளைஞன் ஒருவன் செல்கிறான். குடிசைக்குள் பேரொளியுடன் விளக்கு எரிந்து கொண்டிருக்கிறது. அங்கு துறவி இல்லை. அறையின் மூலையில் அமைதியாகச் சின்ன விளக்கின் வெளிச்சத்தில் படித்து கொண்டிருந்தார் துறவி. காரணம் கேட்ட பொழுது,

> **"பெரிய விளக்கு அந்துப் பூச்சிக்காகவும், விட்டில் பூச்சிக்காகவும்; அவற்றின் தொந்தரவு இல்லாமல் படிக்க சின்ன விளக்கு" [28]**

என்று பதில் வந்தது என்று குறிப்பிடுவதன் மூலம் எளிமையான வாழ்வே மகத்தானது என்பதைத் தெளிவாக்குகிறார்.

தேநீர் உருவான விதம் பற்றி ஜென் தத்துவத்தில் ஒரு கதையுண்டு. போதிதர்மர் தியானம் செய்யும்பொழுது, தூக்கம் வந்து இடையூறு செய்யாமல் இருப்பதற்காகத் தன்னுடைய கண்ணிமைகளைப் பறித்து எறிந்ததாகவும், அந்த இமைகளில் இருந்து வளர்ந்த செடியே தேயிலையானதாகவும், அதனால்தான் தேநீர் அருந்தினால் சுறுசுறுப்புடன் தூங்கி வழியாமல் பணியாற்ற முடிகிறது என்றும் தேநீர் உருவான விதத்ததை இறையன்பு எடுத்துரைக்கின்றார்.

### 3.1.5.1. புராணக் கதைகள்

பெரியவர் முதல் சிறுவர் வரை அனைவரும் கதை கேட்டு மகிழவே விரும்புவர். சொல்ல வரும் கருத்தைப் புராணக் கதைகளோடு சேர்த்துச் சொல்லும்பொழுது, பல புராணங்களை அறிவதுடன், சொல்ல வரும் கருத்தையும் எளிதாகப் புரிந்து கொள்ள முடியும். அவ்வகையில் இறையன்பு இந்தியப் புராணக் கதைகள், கிரேக்கப் புராணக் கதைகள் போன்றவற்றைத் தம் நூல்களில் தேவைக்கேற்ப கையாண்டுள்ளார்.

“பேராசை பெருநஷ்டம்” என்பதை விளக்க, மகாபாரதத்தில் உள்ள *சிரிஞ்ஜயா* என்ற மன்னனின் கதையை எடுத்துக் காட்டுகின்றார் இறையன்பு.

> **“சிரிஞ்ஜயா தனக்கு ஒரு புத்திசாலிக் குழந்தை பிறக்க வேண்டும். அதன் விழிகளில் இருந்தும், வாயில் இருந்தும் முத்துக்கள் உதிர வேண்டும் என்றும் வரம் பெற்றான். அப்படியே ஓர் அதிசயக் குழந்தை பிறந்தது. இந்தச் செய்தி கொள்ளைக்காரர்களுக்கு எட்டியது. அவர்கள் குழந்தையை அபகரித்துச் சென்றனர். மன்னனிடம் இருந்து தப்ப முடியாது எனும் சூழ்நிலையில் குழந்தையை வெட்டினால் ஒவ்வொரு துளி இரத்தமும் முத்தாக மாறும் என்று எண்ணி குழந்தையைச் சாகடித்தார்கள் கொடியவர்கள்”** [29]

மனம், துன்பத்தை அனுபவிக்கும் பக்குவம் பெற்றால், உயர்வுக்கு வழி வகுக்கும் என்பதற்கு உபநிடதத்திலிருந்து ஒரு கதையைக் கூறியிருக்கின்றார்.

> **“உயர்ந்த மரமொன்றின் அடிக்கிளையில் இருந்த பறவை ருசியான பழங்களைச் சாப்பிடும்பொழுது கசப்பு பழத்தைத் தின்ன நேரிட்டால்**

**மேல் கிளைக்குத் தாவும். கடைசியில் உச்சிக் கிளைக்குப் போன போது அதன் உடம்பு தங்கமாக மாறியிருந்ததாம்.''** [30]

என்று குறிப்பிடுவதன் மூலம் மனப்பக்குவமே உயர்ந்த நிலையைக் கொடுக்குமென்பது புலனாகின்றது.

இறைவனின் பெயரை இடைவிடாமல் உச்சரிப்பதில் பக்தி இல்லை. செய்யும் தொழிலில் முழு ஈடுபாட்டுடன் செயல்படுவதும், அப்பணிச்சுமைக்கிடையேயும் இறைவனை நினைவில் கொள்வதுமே சிறந்தது என்பதை, புராண பாத்திரமான நாரதரைக் கொண்டு விளக்குகிறார். நாரதர் ஒரு நாளில் ஆயிரம் முறை "நாராயணா'' நாமத்தை உச்சரிப்பவர். ஏழை உழவனோ காலை, மாலை என இரு வேளை மட்டுமே கூறுபவன். நாரதரை விட உழவனே இறைவனை நினைப்பதில் உயர்ந்தவன் எனும் கருத்தை "கூடாரை வெல்லும் சீர் கோவிந்தா'' பாடல் விளக்கத்தில் (திருப்பாவைத்திறன்ப.43) இறையன்பு அவர்கள் எடுத்தாண்டுள்ளார்.

## 3.1.5.2. திரைப்படங்களின் சுருக்கத்தைக் கூறல்

தான் பார்த்த திரைப்படங்களில் இருந்து சில உண்மைகளை உணர்ந்த இறையன்பு அதை மற்றவர்களும் உணர வேண்டும் எனும் அவாவினால், அத்திரைப்படத்தை விவரித்துள்ளார். உதாரணமாக முகமூடி என்ற அயல் நாட்டுத் திரைப்படத்தில்,

**" ராக்கி என்ற சிறுவனின் தலை எலும்புகள் கூடுதலாக வளர்ந்திந்ததால், வழக்கமான தோற்றத்திலிருந்து விலகியிருந்தான். அவன் உருவம் சக மாணவர்களுக்குக் கேலிப் பொருளானாது. ஒரு நாள் பள்ளி மாணவர்கள் சுற்றுலா சென்ற போது விசித்திரமான கண்ணாடியைக் கண்டனர். அதில் மற்ற மாணவர்களின் தோற்றம் விகாரமாகவும், ராக்கியின் தோற்றம் அழகாகவும் தெரிந்தது. அன்றிலிருந்து மாணவர்கள் கேலி செய்வதில்லை. நேசிக்க ஆரம்பித்தார்கள்''** [31]

என்ற கதையைக் கூறி பெற்றோர் குழந்தைகளுக்கு நேர்மறைக் கண்ணோட்டத்துடன் எதையும் அணுக உதவி செய்ய வேண்டும் என்ற கருத்தை இறையன்பு வலியுறுத்துகின்றார்.

### 3.1.6. பழமொழிகளும் பொன் மொழிகளும்

மக்களின் அன்றாட வாழ்வில் பயன்படுத்தப்படும் பழமொழிகளையும் பொன்மொழிகளையும் ஏற்ற இடங்களில் பயன்படுத்துவது, கருத்துக்களை மக்களிடம் கொண்டு சேர்க்க எளிய வழியாகும். அவ்வகையில் இறையன்பு தான் சொல்ல வந்த கருத்துக்களுக்கு வளம் சேர்க்கும் வகையில், தக்க பழமொழிகளையும் பொன்மொழிகளையும் தன் படைப்புகளில் கையாண்டுள்ளார். அவை இறையன்புவின் கருத்துக்கு உரஞ்சேர்க்கும் வகையில் அமைந்துள்ளன. இறையன்பு எடுத்தாண்ட பழமொழிகள், பொன்மொழிகள் சில வருமாறு,

**"நாற்காலியையே சிம்மாசனமாக்கிக் கொண்டால்,**
**நம் கால்கள் கூட நமக்குச் சிப்பாய்களாக மாட்டா"** [32]

**"நம் மனம் பாராசூட்டைப் போன்றது**
**திறந்திருந்தால் மட்டுமே உபயோகப்படும்"** [33]

**"கடனில் கண் விழித்து எழுவதை விட**
**இராப் பட்டினியுடன் படுக்கப் போவது நல்லது"** [34]

**"மரம் வைத்தவன் தண்ணீர் ஊற்றுவான்"** [35]

**"கொம்புளதற்கு ஐந்து முழம்;**
**குதிரைக்குப் பத்து முழம்"**[36]

**"தூக்கத்தின் காலொடிப்பது துக்கம்"** [37]

**"கடனின் முதுகு மீது புளுகு**
**சவாரி செய்கிறது"** [38]

**"யானைக்கு இரண்டு பற்கள் உள்ளன.**
**காட்டுவதற்கு ஒன்று; கடித்துத் தின்பதற்கு ஒன்று"** [39]

**"இருபதில் கஷ்டப்பட்டால் அறுபதில் சுகப்படலாம்"** [40]

போன்றவை நம் அனைவருக்கும் பொருந்தும் விதத்தில் அமைந்துள்ளன.

### 3.1.7. நகைச்சுவை

நகைச்சுவை மனித இனத்தின் கொடை. மெய்ப்பாடுகள் எட்டில், நகைச்சுவைக்குத் தொல்காப்பியர் முதலிடம் தந்து,

**“நகையே அழுகை இளிவரல் மருட்கை**
**அச்சம் பெருமிதம் வெகுளி உவமை என்று**
**அப்பால் எட்டே மெய்ப்பாடென்ப”** [41]

என்று குறிப்பிடுவதிலிருந்து நகைச்சுவையின் முக்கியத்துவத்தை அறிய முடிகின்றது. மனிதன் சிரிக்கின்றபொழுது அவன் சக்தி கூடுகின்றது. கோபப்படுகின்றபொழுது அவனது சக்தி விரயமாகின்றது. சிரிப்பு தானாக வருவது. புன்னகை நாமாகப் புரிவது. எல்லா உயிர்களாலும் புன்னகை புரிய முடியும்.

**“பூ செடியின் புன்னகை**
**கூவுதல் குயிலின் புன்னகை**
**அலை கடலின் புன்னகை**
**தென்றல் காற்றின் புன்னகை**
**நிழல் மரத்தின் புன்னகை**
**வாலாட்டுதல் நாயின் புன்னகை”** [42]

நகைச்சுவை உணர்வு மேலோங்கியிருக்கிற சமுதாயம், வாழ்க்கையைப் பார்க்கிற கண்ணோட்டம் வித்தியாசமானது. “தன்னைப் பற்றி யாரால் சிரிக்க முடியுமோ அவரே நல்ல நகைச்சுவை உணர்வு படைத்தவர்” என்கிறார் ஜே. கிருஷ்ணமூர்த்தி. தன்னைப் பற்றியும் சிரித்துக் கொள்ளும் பாங்கு சிலருக்கே வருகிறது. அவர்களே நல்ல மனிதர்களாகிறார்கள்; ஞானிகளாகிறார்கள் என்கிறார் இறையன்பு.

*உறக்கம்* பற்றி விளக்குகையில் இறையன்புவின் நகைச்சுவைத் திறன் வெளிப்படுவதைக் காணமுடிகிறது.

**“தன் அழகை சோம்பலால் தொலைத்திருக்கும் பெண்ணை**
**எழுப்பும் போது கும்பகர்ணன் உனக்குப் பெருந்தூக்கம்**
**தந்தானோ! இறப்பவர்கள் அடுத்தவர்களுக்கு உயிலை**
**விட்டுச்செல்வார்கள். ஆனால் துயிலை விட்டுச்சென்றவன்**
**கும்பகர்ணன். இன்னும் பலர் தூக்கத்தில் இருளைக்**
**கட்டிப் பிடித்துக் கொண்டு படுத்திருக்கிறார்கள்”** [43]

என்று தூக்கத்திலேயே பொழுதைக் கழிப்பவர்களை எள்ளி நகையாடுகின்றார்.

உறக்கத்தையே வாழ்க்கையாகக் கொண்ட பலருக்கு நேரமே இருப்பதில்லை என்பதை,

**"கற்கால மனிதனுக்கு நேரமிருந்தது;**

**கடிகாரமில்லை;**

**தற்கால மனிதனிடம்**

**கடிகாரமிருக்கிறது;**

**நேரமில்லை"** [44]

என்று குறிப்பிட்டு எள்ளி நகையாடுகின்றார். சிரிப்பு என்பது,

**"சர்க்கரைப் பொங்கலில் இருக்கும் சர்க்கரையைப் போலக்**

**கண்ணுக்குத் தெரியாமல் இழையோடி இருக்க வேண்டும்"** [45]

என்பதே இறையன்புவின் சிந்தனை.

## 3.1.8. உவமைகளும் உதாரணங்களும்

தாம் சொல்ல வரும் கருத்தை, மக்கள் ஏற்கனவே அறிந்த சில பொருட்களைக் கொண்டு விளக்குவது எளிமையாய் புரியவைப்பதற்கான ஒரு வகை உத்தி. இறையன்புவின் நூல்களில் ஏராளமான உவமைகள் இடம் பெற்றுள்ளன. அதன் மூலம் அவர் சொல்ல வரும் கருத்து எளிமையாய் விளங்குகின்றது.

எந்தக் கோரிக்கையும் இன்றி இறைவனை வழிபடுவோரே உண்மையான பக்தர் என்பதைச் சொல்லக் கருதிய ஆசிரியர்,

**"பால் மடியிலிருந்து பாத்திரத்திற்கு மாறும் போது சற்று நீர்த்து போய்விடுகிறது. அதைப் போல இறைவனிடம் கோரிக்கை வைப்பதால் பக்தியும் நீர்த்துப் போய் விடுகிறது"** [46]

எனும் உவமையைக் கையாண்டு உணர்த்துகின்றார்.

**"ஆறு தன் அடையாளத்தை இழக்கும் போது தான் கடலோடு கலக்க முடியும். அதைப் போல நாமும் நம் தன் முனைப்பு, ஆசை, ஆணவம் முதலியவற்றைத் தொலைக்கும் போதுதான் இறைவனோடு இரண்டறக் கலக்க முடியும்"** [47]

பொருத்தமான உவமைகளால் நம்மைச் சிந்திக்கத் தூண்டுகின்றார் ஆசிரியர்.

இறையன்பு கையாளும் உவமைகள், படிப்பவர் மனதில் பல்வேறு பரிமாணங்களை உருவாக்கும் விதத்தில் அமைந்துள்ளன.

**“அவனுக்கு வந்த கோபத்தை ஜமுக்காளத்துக்கடியில் தள்ளி**

**மூடுவதைப் போல உள்ளுக்குள்ளேயே அமுக்கிக் கொண்டான்” [48]**

**“தன் சொந்த வீட்டில் அந்நியமான உணர்வு.**

**ஏதோ தர்மசத்திரத்தில் படுத்திருப்பது போல எண்ணம்” [49]**

**“அகற்றுவதற்கு முன்பே இடிந்து போன**

**ஆக்ரமிப்புக் கட்டடம் போல ஆகிவிட்டது**

**அந்தக் கட்டளை” [50]**

**“நெருப்புக் கோழி தலையைத் தூக்குவது**

**மாதிரி தலையைக் கோதிவிட்டுக் கொண்டே” [51]**

எனப் புதுமையான சில உவமைகளை இறையன்பு கையாண்டுள்ளார்.

### 3.1.9. வேறுபடுத்திக் காட்டல்

ஒரே பொருளில் வரக்கூடிய இருவேறு சொற்களை அவற்றின் உண்மை நிலை வெளிப்படுமாறு வேறுபடுத்திக் காட்ட நுண்ணறிவு இன்றிமையாதது. இறையன்பு நுட்பமாகப் பொருள் தரும் இருவேறு சொற்களைக் கச்சிதமாக ஒரு நூலிழையால் வேறுபடுத்திக் காட்டுகின்றார்.

கருணையும் பரிதாபமும் பற்றிக் குறிப்பிடுகையில் இறையன்பு ,

**“கருணை என்பது உணர்வு; பரிதாபம் என்பது உணர்ச்சி. கருணை**

**ஆழமானது; பரிதாபம் மேம்போக்கானது. பரிதாபம் உணர்வோடு**

**நின்று விடுகிறது. கருணை செயலாக வடிவம் பெறுகிறது” [52]**

என்று விளக்கமளிக்கின்றார்.

நம்பிக்கை, அவநம்பிக்கை, அதீத நம்பிக்கை ஆகியவற்றைச் சுட்டும் விதம் வித்தியாசமானதாக அமைந்துள்ளது.

**“என்னால் முடியும் – நம்பிக்கை**

**என்னால் முடியுமா? – அவநம்பிக்கை**

**என்னைத் தவிர எவனால் முடியும்? அதீத நம்பிக்கை” [53]**

என்று குறிப்பிடும் ஆசிரியர், நம்பிக்கை- முயற்சியுடனும் உழைப்புடனும் நட்பு கொள்ளும். அதீத நம்பிக்கை உழைப்பையும் முயற்சியையும் ஒருக்களிக்கச் செய்துவிட்டு, ஆணவத்தோடு வாழும். அவநம்பிக்கை சறுக்கி விழச் செய்து

சிராய்ப்புகளை ஏற்படுத்தும். அதீத நம்பிக்கை, துள்ளிக் குதிக்க வைத்து முட்டியை உடைத்து விடும் என்கிறார். ஒரு தேர்வு நடக்கிறது.

**"நானும் வெற்றி பெற வேண்டும் – இது ஆசை.**

**நான் மட்டுமே வெற்றி பெற வேண்டும்- இது சுயநலம்.**

**அவன் வெற்றி பெறக் கூடாது- இது பொறாமை"** [54]

என்று சுட்டிக் காட்டுவதன் மூலம் எது ஆசை? எது சுயநலம்? எது பொறாமை? என்பதைத் தெளிவாகப் புரிய வைக்கின்றார் இறையன்பு.

### 3.1.10. இலக்கியங்களை எடுத்தாளல்

இலக்கை நோக்கிப் பயணிக்க வைக்கும் இலக்கியங்கள், காலத்தைக் காட்டும் கண்ணாடிகள். இலக்கியம் நேரடியாக முரசு கொட்டி முழங்குவதில்லை. அது மறைமுகமாக விழிப்புணர்வை ஏற்படுத்துகிறது. இலக்கியங்கள் நம்மிடையே மௌனமாக மாற்றங்களை ஏற்படுத்தி நம்மை மேன்மையடையச் செய்கின்றன. இலக்கியத்தை நுணுக்கமாகப் பேசுபவர் இலக்கியவாதி அல்ல. இலக்கியத்தின்படி நடக்கிற மனிதர்களே நல்ல இலக்கியவாதிகள். அப்படி உண்மையான இலக்கியவாதியாகத் திகழும் இறையன்பு, கம்பரையும், வள்ளுவரையும், பாரதியையும் மேற்கோள் காட்டாத இடங்களே இல்லை எனலாம்.

விருந்து பற்றிக் குறிப்பிடுகையில், கொங்கு நாட்டினர் கம்பரைப் போற்றாமையால், அவர் அந்நாட்டினை இகழ்ந்து பாடியதைக் குறிப்பிடும் இறையன்பு, இருபதாம் நூற்றாண்டில் வாழ்ந்த கண்ணதாசன்,

**"அப்பப்பா! கோவையிலே விருந்து உண்டால்**

**ஆறுநாள் பசியும் வயிறும் வேண்டும்.**

**தப்பப்பா! சாப்பாட்டாலேயே சாகடிப்பார்**

**ஒப்பப்பா? இவர் உள்ள**

**உயர்வப்பா இவர் உள்ளம் உயர்விலை"** [55]

கொங்கு மண்டலத்தைப் பாராட்டியதைச் சுட்டத் தவறவில்லை.

நன்றியறிதலை மூதுரை (ஏழாவது அறிவு I ப. 232) பாடலைக் கொண்டும் காணும் எல்லாப் பொருட்களிலும் இறைமையை தரிசித்தல் என்பதை, காக்கைச் சிறகினிலே நந்தலாலா என்ற பாரதியின் வைரவரிகளைக் கொண்டும் (ஏழாவது அறிவு I ப.56), நாடு எவ்வாறு இருக்க வேண்டும் என்பதை, கம்பரின் "வன்மை

இல்லை ஓர் வறுமையின்மையால்" (ஏழாவது அறிவு I ப. 218) பாடல் கொண்டும் உணவே மருந்து என்பதை, திருக்குறள், சித்தர் நூல்களைக் கொண்டும் (ஏழாவது அறிவு II ப.110) ஆசிரியர் விளக்குகின்றார்.

கல்வியின் சிறப்பை, நாலடியார் பாடல் மூலமும் (ஏழாவது அறிவு II ப. 171), கல்வியைக் களவாட முடியாது என்பதை, "வெள்ளத்தால் போகாது வெந்தழலால் வேகாது......". என்ற தமிழ்ப் பாடல் மூலமும் (ஏழாவது அறிவு III ப. 149) விளக்குகின்றார் இறையன்பு.

குணங்களை மனிதர்களாக்குவது மேற்கத்திய மரபு. சில ஆங்கில நூல்களில் கோபம் ஓர் உருவாக, சோம்பல் ஒரு பாத்திரமாக, பொறாமை ஒரு படையாக, கருணை ஒரு மனிதனாகச் சித்தரிக்கப்படுவது உண்டு. இத்தகைய உருவகப் பெயர்களை ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே திருவள்ளுவர் தமது குறட்பாக்களால் அறிவுறுத்தியுள்ளார்.

குணமென்னும் குன்று – குறள் 29

அழுக்காறு என ஒரு பாவி – குறள் 168

பசி என்னும் தீப்பிணி – குறள் 227

கண்ணோட்டம் என்னும் காரிகை – குறள் 571

நாணென்னும் நல்லாள் – குறள் 924

சூதென்னும் முகடி – குறள் 936

நிலமெனும் நல்லாள் – குறள் 1040

இன்மை என ஒரு பாவி – குறள் 1012

கிழக்கத்திய மரபில் மனிதர்களைக் குணங்களாக்குவது இலக்கியச் செறிவு. அதனால் தான் நம் இதிகாசங்களில்,

| | | |
|---|---|---|
| **"சூழ்ச்சி** | – | **சகுனி** |
| **தந்திரம்** | – | **கூனி** |
| **பேராசை** | – | **துரியோதனன்** |
| **தருமம்** | – | **யுதிஷ்டிரன்/தருமர்** |
| **வள்ளல்தன்மை** | – | **கர்ணன்** |
| **விசுவாசம்** | – | **கும்பகர்ணன்** |
| **விடாமுயற்சி** | – | **இலக்குவன்** |
| **நன்றிக்கடன்** | – | **பீஷ்மர்** |

| | | |
|---|---|---|
| **வலிமை** | – | **பீமன்** |
| **விடாமுயற்சி** | – | **அர்ஜுனன்** |
| **வைராக்கியம்** | – | **திரௌபதி/பாஞ்சாலி** |
| **நேர்மை** | – | **விதுரர்" [56]** |

சுட்டப்பட்டுள்ளதை இறையன்பு எடுத்துக்காட்டுகின்றார். இவை மட்டுமின்றி ஓரறிவு முதல் ஆறறிவு வரை உயிர்களை வகைப்படுத்த, தொல்காப்பியத்தையும் (ஏழாவது அறிவு I ப. 266) நகைச்சுவையைத் தெளிவுபடுத்த மெய்ப்பாடுகளை எடுத்தியம்புவதன் மூலம் இவரின் இலக்கண அறிவும் புலனாகின்றது.

## 4. கவிதையில் ஆளுமை

மனிதன் மொழியாகிய தெப்பத்தைக் கொண்டு தன் எண்ணங்களைப் படைப்பாக்குகிறான். சிறந்த இரசனையாளரால் மட்டுமே சிறந்த படைப்பாளியாக உருவாக முடியும். படைப்பாளரின் இரசனையை வைத்து அவரது படைப்பை எடை போடலாம். இறையன்புவின் படைப்புலக அறிமுகம், முதலில் அவரைக் கவிஞராகவே அடையாளம் காட்டியது. 1994ஆம் ஆண்டு "பூபாளத்திற்கொரு புல்லாங்குழல்" என்னும் கவிதைத் தொகுப்பினை முதல் படைப்பாக வெளியிட்டு தனது இலக்கியப் பயணத்தைத் தொடங்கிய இறையன்பு வாய்க்கால் மீன்கள், வைகை மீன்கள், சறுக்கு மரம், முகத்தில் தெளித்த சாரல் என்று தனது கவிதை நூல்கள் மூலம் இலக்கிய உலகில் தொடர்ந்து பயணிக்கிறார்.

புதுக்கவிதையின் இன்றியமையாமையை எழுத்தாளர் மோகன் குறிப்பிடுகையில்,

> **"புதுக்கவிதையின் வருகை தமிழ்க் கவிதையின் வளர்ச்சிப் பாதையில் தவிர்க்க முடியாததாக அமைந்து விட்டது. புதுக்கவிதை இன்று கால நியாயம் ஆகிவிட்டது. அதன் ஆற்றலை, சாதனையை, போக்கை ஆராய வேண்டிய காலக் கட்டத்தில் வாழ்ந்து வருகிறோம்" [57]**

என்பார்.

"இலக்கியத்தின் ஓர் இனிய பகுதி கவிதை. அது முற்றிலும் எழுதுபவர்களுக்குச் சொந்தமான சிந்தனையாக ஊற்றெடுக்கின்றது. ஒவ்வொரு கவிதையும் எழுதியவர் இதயத்தில் ஏற்படுத்துகின்ற மின்னல் சரங்களின் புகைப்படங்களே" என தனது முதல் படைப்பின் முன்னுரையில் இறையன்பு

குறிப்பிட்டதைப் போல, படிப்பவர்கள் இதயத்திலும் மின்னல் சரங்களின் புகைப்படங்களாய் இக்கவிதைத் தொகுப்புகள் அமைந்துள்ளன.

வார்த்தைகள் வாய்க்கப் பெறுவது ஒரு தனிச்சிறப்பு. வார்த்தைகளை வசப்படுத்தும் ஆளுமை உடையவரே சிறந்த படைப்பாளி. மானிட ஆளுமை, பண்பாட்டு ஆளுமை, தொழில் ஆளுமை என ஆளுமைகள் பலவகைப்பட்டாலும், ஒரு மனிதனின் ஆளுமை வெளிப்படுவது அவனின் மொழி வாயிலாகத்தான். சிறந்த படைப்பாளியான இறையன்பு, தன்னைச் சார்ந்தவர்களைத் தன் தொழில் ஆளுமையால் கவர்ந்தாலும், எழுத்து ஆளுமையால் வசப்படுத்தும் சக்தி கொண்டவர்.

## 4.1.புதுக்கவிதை – விளக்கம்

புதுக்கவிதைக்கு விளக்கம் கூறுகையில் தமிழவன்,

**“இலக்கண வில்லை முறித்த நாங்கள்**

**புதுக்கவிதையாம் சீதையை மணந்தோம்”** [58]

என்று கூறுவதை அடியொற்றி இறையன்புவும், கவிதை என்பது கட்டுப்பாடுகளைத் தாண்டுவது, தடைகளைத் தகர்த்தெரிவது என்கிறார்.

கவிதை வேலியைக் கடப்பது. வரையறுக்கப்பட்ட எல்லைகளை மீறி, உணர்வுகள் ஊற்றெடுக்கும்பொழுது அது கவிதையாக மலர்கின்றது. கவிதை மொழிக்கப்பாலும், தன் வேர்களைச் செலுத்த முடியும் என்பதை அறிந்தவர்களே கவிஞர்கள். அதனாலேயே,

**“கவிதையை நேசிக்கிறவர்கள் உலகத்தை ஒவ்வொருவர் விழிகள்**

**மூலமாகவும் உற்று நோக்கக் கற்றுக் கொள்கிறார்கள்”** [59]

என்று இறையன்பு கூறுகின்றார்.

### 4.1.1. காதலின் மொழி கவிதை

உலகில் காதல் இல்லாத உயிர்களே இல்லை எனலாம். அதனால் தான் மகாகவி சுப்பிரமணிய பாரதியும் காதலைப் பற்றிக் குறிப்பிடுகையில்,

**“காதல் காதல் காதல்**

**காதல் போயின்**

**சாதல் சாதல் சாதல்”** [60]

என்கிறார். உலக உயிர்களை இணைக்கும் இணைய தளம் காதல் என்று கூறும் இறையன்பு, உயிரில் முளைத்த சிறகு காதல். அது ஓசையில்லா சலனம். உயிரை இயக்கும் அசைவு என்கிறார். காதல் காவியத்தை இயற்றுகையில், பெயரைச் சுட்டுவது பண்பாடாகாது.

**“மக்கள் நுதலிய அகன் ஐந்திணையும்**

**சுட்டி ஒருவர் பெயர் கொளப் பெறார்”** [61]

என்ற இலக்கண வரம்பை மீறாமல், “வாய்க்கால் மீன்களிலும்” “வைகை மீன்களிலும்” பெயர்களைச் சுட்டிச் சொல்லாமல் கவிதையைக் கட்டிச் செல்கின்றார் இறையன்பு.

## 4.1.2. தலைவன் அறிமுகம்

கதை அல்லது கவிதையில் தலைவன் வாசகர்களைக் கவரும் விதமாய், முன்னுதாரண மனிதனாய் அமைவது அவசியம். அவ்வகையில் *வாய்க்கால் மீன்*களின் நாயகன் தற்கால இளைஞர்களுக்கு நல்வழிகாட்டியாக அமையுமாறு ஆசிரியர் படைத்துள்ளார். தலைவனை அறிமுகம் செய்வதைக் கொண்டே, அவனின் குணாதிசயங்களை அறிந்து கொள்ள முடியும். “வாய்க்கால் மீன்கள்” தலைவனை அறிமுகப்படுத்தும் பொழுது,

**“அந்த ஊருக்கு வரும் போது**

**சின்னப் பையில்**

**தான் சலவை செய்த துணிகளோடும்**

**பெரிய பெட்டியில் தான்**

**சேமித்திருக்கும் புத்தகங்களோடும்**

**வந்தான்”** [62]

என்று குறிப்பிடுவதிலிருந்து தலைவன் படிப்பாளி என்பதும், தனது வேலைகளைத் தானே செய்து கொள்ளக் கூடியவன் என்பதும் புலனாகின்றது.

தலைவியை அறிமுகப்படுத்தும் பொழுது பொதுவாக மெய்வனப்பை முதன்மைப்படுத்தி எழுதும் சூழலிலிருந்து மாறுபட்டு, அறிவழகை முதன்மைப்படுத்தி வாய்க்கால் மீனின் தலைவியை,

**"பெண்கள் என்றால்**

**நகையிலும் புடவையிலும்**

**அவர்கள் இதயம் முடிந்துவிடுகிறது**

**என்பவர்கள்**

**அவளைப் பார்த்தால்**

**திருத்திக் கொள்வார்கள்"** [63]

முன்னிலைப்படுத்தும் இறையன்பு, இன்றைய படைப்பாளர்களுக்கு முன்மாதிரியாகத் திகழ்கின்றார்.

காதல் என்பது எந்த நொடியிலும் ஏற்படக் கூடியது. இப்பொழுதுதான் வரும் என்றெல்லாம் வரையறுத்துக் கூற முடியாத ஒன்று. இயற்கையை இரசித்து இயல்பாய் இருந்தவனுக்குக் காதல் புதிதாக மலர்வதைக் கவிஞர்,

**"அந்த கிராமித்து மண்ணை**

**மிதிக்கும் போது**

**அவனுக்குள் இன்னொரு தாமரை**

**விரிவதை உணர்ந்தான்"** [64]

என்ற கவிதை வரிகள் மூலம், பல நாள்கள், அல்லது பல ஆண்டுகள் வெளியூரில் இருந்து விட்டு தன் சொந்த மண்ணை மிதிக்கும்பொழுது, தன் கிராமத்து மண்ணைப் பற்றி எழும் மனவுணர்வோடு காதல் வயப்பட்டவர்க்கு இயல்பாகத் தோன்றும் காதல் உணர்வை ஒப்பிடுகின்றார்.

காதலைச் சொல்லி, அதைக் காதலி மறுத்து விட்டால் காதல் தேர்வில் தோற்றுவிடுவோமோ என்று பயந்து தேர்வே எழுதாமல் இருக்கும் காதலன் காதலைச் சுமந்து நிற்பதை,

**"அடைகாக்கும் காதல்**

**நிறைவேறாத நேசத்தினும்**

**புனிதமாயிற்றே**

**மடியிலிருக்கும் பாலாய்**

**அவன் கனவுகள் காத்திருந்தன"** [65]

என்று சொல்லும் கவிஞர்,

**"கை குலுக்கிப் பிரிவாளோ**

**கை பிடித்துத் தொடர்வாளோ" 66**

என்று "தெரியாத தோழிக்குச் சமர்ப்பணம்" என்று தலைவன் எழுதிய கவிதை மூலம் காதலைக் கரையேற்றுகின்றார் இறையன்பு.

## 4.1.3. காதலின் உன்னத நிலை

காதலித்து, தவித்து, இல்லாமல் போவது தான் காதல் என்று காதலில் தோற்றவர்கள் சொன்னாலும் காதலில் காத்திருப்பதே ஒரு தனிசுகம் தான். நிமிடங்கள் வருடங்களாய், வருடங்கள் நிமிடங்களாய் மாறுவதும் காதலில் வாடிக்கையே!

**"கடிகாரம் அவர்கள்**

**அருகில் இருக்கும் போது**

**மணி முள் கூட நிமிட முள்ளின்**

**வேகத்தில் நகர்கிறது" 67**

என்றும்,

**"வாசலிலேயே**

**கால்கள் வேர் விடுமளவு காத்திருந்தாள்" 68**

என்றும் குறிப்பிடுதிலிருந்து காதலில் காத்திருத்தல் என்பது ஒரு வகை *தவம்* என்பதை இறையன்பு புலப்படுத்துகின்றார்.

## 4.1.4. காதலில் ஜெயிக்கும் வழி

இறையன்புவின் கவிதையுலகம் கற்பனையால் அன்றி கற்பிப்புகளால் சிறந்து விளங்குகின்றது. முதல் பார்வையிலேயே காதல் உருவாகும் என்று கூறிய ஆசிரியர் இறுதியில் அதில் வழுக்காமல் மனதைத் திடப்படுத்திக் கொள்பவரே வாழ்வில் வெற்றி பெறுவர் என்று கூறுவது ஏற்புடையது.

**"விழியே இதழாய் மொழிகள் பேசும்**

**இமைகள் அசைவில் தென்றல் வீசும்**

**பார்க்கும் போதே பரவசம் தோன்றும்**

**பார்வை வேண்டி தவங்கள் நடக்கும்**

**பார்த்த பின்னும் ஆர்வம் துளிர்க்கும்" 69**

என்று காதலின் அறிகுறியைப் படம் பிடித்துக் காட்டும் இறையன்பு,

**"பதின்மப் பருவம் வருகிறபோது**

**பார்க்கிற உருவம் அனைத்தும் அழகு**

**உடலுக்குள்ளே உற்பத்தியாகும்**

**வேதியல் மாற்றம் வேதனை செய்யும்**

**அரும்பு மீசை அரும்பும் வயதில்**

**குறும்பு ஆசை குவிந்து நிரம்பும்**

**அவற்றைத் தாண்டி மனத்தை திடமாக்கி**

**வைராக்கியங்கள் வளர்ப்பவர் வெல்வார்" [70]**

என்று சொல்வதன் மூலம் காதலில் ஜெயிக்க மனதை அடக்க வேண்டும் என்பதை வலியுறுத்துகின்றார்.

## 4.2. ஐக்கூ

புதுக்கவிதையின் இன்னொரு வளர்ச்சிப்படிதான் ஐக்கூ. புதுக்கவிதையைத் தமிழுலகிற்கு அறிமுகம் செய்து வைத்த பாரதியே ஐக்கூவிற்கும் அடித்தளமிட்டார். ஐக்கூ என்பதற்குக் கிளிஞ்சல் என்றும் உணர்வு இலக்கியம் என்றும் பொருள் கூறுவார் இறையன்பு. இறையன்பு ஐக்கூ படைக்கவில்லை எனினும் வாசித்த, தன்னைக் கவர்ந்த ஐக்கூவை மையப்படுத்தி, அவை தமக்குள் ஏற்படுத்திய அனுபவத்தை, தாக்கத்தை கவிதையாகத் தந்துள்ளார்.

**"ஆழமான இலையுதிரில்**

**இன்னும் பட்டாம்பூச்சியாகவில்லை**

**இந்தப் புழு" [71]**

ஓர் இயற்கையின் பதிவாக உள்ள இந்த ஐக்கூ வெளிப்படையான ஒரு நிகழ்வை உள்ளடக்கியுள்ளது. ஒரு கூட்டுப் புழு, பட்டாம்பூச்சியாகப் பரிமாணம் கொள்வதற்குள் படும் துயரம் விளங்குகின்றது. எல்லாச் சிந்தனைகளும் கவித்துவம் அடைவதில்லை என்பது போல புழுக்கள் அனைத்துமே பட்டுப்பூச்சி ஆவதில்லை என்கிறார். கவிஞரின் புழு நேயம் புலப்படுகின்றது.

"சுத்தம் சோறு போடும்" என்பது பழமொழி. அசுத்தம் சோறு போடும் என்கிறது ஒரு ஐக்கூ.

**"அசுத்தம்**

**சோறு போடும்**

**துப்புரவுத் தொழிலாளி"** [72]

துப்புரவுத் தொழிலாளியின் பணி, அசுத்தம் செய்வதன்று. சுத்தம் செய்வது அடுத்தவர்களின் அசுத்தங்களைச் சுத்தம் செய்வதால் மனித நாகரிகம் இவர்களால் காப்பாற்றப்படுகின்றது.

**"தேடிச் சென்ற**

**கள்ளிச் செடிப் புதரில்**

**குட்டிகளுக்குப் பாலூட்டும் நாய்"** [73]

*உணர்வு இலக்கியம்* என்று கூறி இந்த ஐக்கூவைப் படித்துத் தன் உணர்வைத் தெரிவித்து ஐக்கூவின் தரத்ததை உயர்த்தியுள்ளார் இறையன்பு. கள்ளிச் செடிப் புதரில் மனிதத் தாய், கொல்லப் பால் தேடிப் போகிறாள். அங்கு, நாய் தன் குட்டிகளுக்குப் பாலூட்டிக் கொண்டிருக்கிறது. இதனைப் பார்த்த பிறகாவது திரும்புவாளா/திருந்துவாளா பெண் சிசுவின் தாய்? என்று கேட்பதன் மூலம் யார் தாய்? யார் நாய்? என்று நம்மைச் சிந்திக்கத் தூண்டுகின்றார்."

## 4.3. மொழி நடை

ஒரு படைப்பின் தன்மையை அளவிடும் பல்வேறு உத்திகளுள் நடையியல் இன்றியமையாத ஒன்றாகும். எப்படி ஒருவர் பேசுவதைப் போல மற்றொருவர் பேசமுடியாதோ, அதுபோல ஒருவரது எழுத்தைப் போன்றே அடுத்தவரின் எழுத்தும் அமைவதில்லை. இலக்கிய படைப்பாளியை இனம் கண்டு கொள்ள, அவரது மொழிநடை பெரிதும் பயன்படுகிறது.

"சொல்லில் விளங்கும் சுடரே சக்தி "என்கிறார் மகாபவி பாரதியார். சரியான சொல் வந்து அமைவதுதான் கவிதைக்கு மிகவும் தேவை. கவிதையே *வார்த்தை தவம்* எனலாம். நல்ல கவிதையில், ஒரு சொல்லை மாற்றியமைத்தாலும் கவியழகு கிடைத்திருக்காது என்று சொல்லும் அளவுக்கு சொற்தேர்வு அமைய வேண்டும். எனவேதான், நம் முன்னோர்கள் *ஒரு* சொல் வெல்லும் சொல்; ஒரு சொல் கொல்லும் சொல் என்று சொன்னார்கள். சரியான சொற்களை கையாளுவதைப் பற்றி வள்ளுவரும்,

"சொல்லுக சொல்லைப் பிரிதோர் சொல் அச்சொல்லை

வெல்லுஞ் சொல் இன்மை அறிந்து" [74]

"கேட்டார்ப் பிணிக்கும் தகைய்வாய்க் கேளாரும்

வேட்ப மொழிவதாஞ் சொல்" [75]

என சொல்லாட்சிக்கு மிகுந்த சிறப்பளித்துள்ளார். இத்தகு வெல்லும் சொற்கள் இறையன்புவின் கவிதைகளில் விரவிக் கிடப்பதைக் காணலாம்.

"ஆண்களுக்கு உலகம் அட்சய பாத்திரம்

பெண்களுக்கு அதுவோ வடிகட்டி" [76]

"வசந்தத்தின் அருமையை

வசந்தத்திலேயே வரவு வைத்துக் கொள்வதுதான்

முதிர்ச்சியின் சாமுத்ரிகா லட்சணம்" [77]

"அகத் தேடலுக்குத் தனிமையும்

புறத்தேடலுக்குக் கும்பலும் அவசியமாகிறது" [78]

"அக்கரை சேர்க்கும் அக்கறையில் நான்

இக்கரையிலேயே இருந்து விட்டேன்"[79]

"பார்த்தவுடன் வருவதுதான் நேசம்

பழகிய பின் அரும்புவது பாசம்" [80]

"அனுமதி பெறாமல் வருவதே காதல்

அனுமதி பெற்றாமல் அது சமரசம்" [81]

"வெட்டிமன்றமாகாத பட்டிமன்றங்கள்" [82]

"ஓட்டைப் பாத்திரத்தில்

உயர்ந்த பண்டமும் ஒழுகிவிடும்" [83]

"நொடிகளையெல்லாம் முட்களாக்குவாள்" [84]

"தனியாய் இல்லை

தனித்து இருக்கிறேன்" [85]

"காதல் எனும் உணர்வு

பாதரசம் போல்

கனமாக இருந்தாலும்

கைகளில் அகப்படாது" [86]

"காத்திருக்கும் கரியே வைரமாகிறது

ஆத்திரப்படும் மனிதனோ கரியாகிறான்" [87]

**"மலர்களைக் கசக்கியே மானுடம் உயர்ந்தது**
**மனங்களை நசுக்கியே மகுடங்கள் விளைந்தது"** [88]

**"விளையாட்டு என்பது**
**அயர்வை அகற்றும் வியர்வைத் திருவிழா"** [89]

## 4.3.1. சொல்லாட்சி

இறையன்பு கவிதைகளில் சொல்லாட்சி மிகச் சிறப்பாக இடம்பெற்றிருக்கின்றது. ஒரே ஓசை நயமுடைய சொற்களைப் பயன்படுத்தும் இயைபுத் தொடையும், வித்தியாசமான சொற் சேர்க்கையும், மொழியின் அழகியலை வெளிப்படுத்தும் வித்தியாசமான அடைச்சொற்களும் இணையெதிர்ச் சொற்களைக் கையாளுவதும் சொல்லாட்சியின் கீழ் அமையும்.

### 4.31.1. இயைபு

ஒரு பாடலில் உள்ள இறுதி எழுத்தோ அல்லது சொல்லோ, ஒன்றி வருவது இயைபு.

**"முதல் நாள் மகிழ்ச்சி**
**மறுநாள் தளர்ச்சி**
**பின்னர் நெகிழ்ச்சி**
**இறுதியில் இகழ்ச்சி"** [90]

**"சமைப்பர் கனிவு**
**பரிமாறுபவர் பரிவு**
**உண்பவர் உணர்வு**
**மூன்றும் சேர்ந்ததே உணவு"** [91]

**"தாய்க்கு வலியில் பிறப்பு**
**தனக்கு வலியில் இறப்பு"** [92]

**"கடின உழைப்பையும்**
**கடனற்ற வாழ்வையும்**
**கனிவான நடத்தையையும்"** [93]

### 4.3.2. சொற் சேர்க்கை

படைப்பு மொழி அன்றாட மொழியிலிருந்து வித்தியாசப்பட வேண்டும். இறையன்புவின் வித்தியாசமான சொற் சேர்க்கைகள் சில, பூபாளத்திற்கொரு புல்லாங்குழல் எனும் நூலில்-

- விதைப்பதற்கும் புதைப்பதற்கும்,
- விழிப்புணர்வு விதைகள்,
- நம்பிக்கை நாற்றுகள்,
- உற்சாக உரம்,
- சந்தேகக்களை,
- மகிழ்ச்சி மத்தாப்பு,
- கலகத் தகராறு போன்ற சொற்சேர்க்கைகளும், வைகை மீன்களில்-
- பூவின் புலம்பல்,
- உழைப்பு கோபுரம் ,
- புகழ் போதை,
- கான்கிரீட் காடு,
- எச்சச் செடி போன்ற சொற்சேர்க்கைகளும் அமைந்து படைப்பினை மெருகூட்டுகின்றன.

#### 4.3.2.1. அடைகள்

பெயரை அல்லது வினையைச் சிறப்பித்து வருவது அடை எனப்படும். இறையன்பு பயன்படுத்தும் அடைகள் வித்தியாசமானவை. வைகை மீன்களில்-

சாரமற்ற தீர்ப்பு, நளினமான மனிதர்கள் ,அனுதாபத் தேமல்கள், முதிர்ந்த புன்னகை, அச்சஇருள், ஆச்சரிய மின்னல்கள், நிர்வாண முகப்பு, சுதந்திரச் சிறகுகள் போன்ற அடைகள் இடம்பெருகின்றன.

#### 4.3.2.2. இணையெதிர்ச் சொற்கள்

இறையன்பு புதிய புதிய சொற்களை இணையெதிர்ச் சொற்களாகச் சேர்த்துத் தம் கவிதைகளில் பயன்படுத்தியுள்ளார். இவை கவிதைக்கு இசைநயத்தைக் கொடுக்கின்றன.

"கரும்பும் நெல்லுமாய்

பாக்கும் தெங்குமாய்

ஆற்றையும் மலையையும்" [94]

"கணிதமும் ஆங்கிலமும் " [95]

"இலக்கியத்தையும் இசையையும்" [96]

"புரிதலும் அறிதலும் ஆராய்தலும்" [97]

"நெருஞ்சிப்பூவைப் போல அல்ல

குறிஞ்சிப் பூவைப் போல" [98]

புருஷம், ஜனனம், முஷ்டி, ஐ.எஸ்.ஐ., பகிஷ்கரிப்பு, கான்கிரீட் போன்ற பிறமொழிச் சொற்களை மிகக் குறைவாகவும் சுளை சுளையாய், மீண்டும் மீண்டும் போன்ற அடுக்குத் தொடர்களை அருகியும் பளபள, சிற்சில, வழவழ போன்ற இரட்டைக்கிளவியை இங்கொன்றும் அங்கொன்றுமாய் கையாண்டுள்ளார் ஆசிரியர்.

## 4.4. அழகியல் அனுபவம்

மனிதன் தன்னைச் சுற்றியுள்ள பொருள்களையும், நிகழ்ச்சிகளையும் ஓசை முதலானவற்றையும் கண்டு மகிழ்வது அழகியல் ஆகும். "புலன்கள் அல்லது மனதை இன்புறுத்துவது அழகு" என்றார் தாமஸ் அக்கினாஸ். கீட்ஸ் என்கிற ஆங்கில கவிஞர் "உண்மையே அழகு" என்றார். அழகியல் அனுபவம் என்பது நாம் காணும் கலைப்பண்புகளைப் பொறுத்து இருக்கிறது. அதே நேரத்தில் அழகியல் ரீதியான பார்வை இல்லாதவன் மிக உயர்ந்த கலைப்படைப்பைப் பார்க்கநேருகின்றபொழுதுங்கூட அதிலிருந்து கலை இன்பத்தைப் பிழிந்தெடுக்க முடியாதவனாகி விடுகிறான். இறையன்பு இயற்கையையும் மக்கள் வாழ்வியலையும் பல்வேறு கண்ணோட்டத்தோடு அணுகி, ஆய்ந்து, அதனை அழகியல் உணர்வோடு தீட்டியுள்ளார். இவரது படைப்புகளில் அழகியலானது இயற்கை, படிமம், குறியீடு, அங்கதம் என்னும் நான்கு நிலைகளில் காணப்படுகிறது.

### 4.4.1. இயற்கை

இயற்கை ஒரு சிறந்த புத்தகம். வாழ்க்கையை அந்நியமாக்காமல் இணைக்கிற பாலமாக இருப்பது இயற்கை. இயற்கையை வருணிக்குங்கால்,

**"பச்சைப் புடவை கட்டியிருக்கும் பெண்கள்**

**பொட்டு வளையல் என அனைத்தையும்**

**பச்சை வண்ணத்திலேயே**

**அணிவதைப் போல்**

**பச்சை வயல் தாவணியை**

**அணிந்திருந்த அந்த பூமி**

**பாக்குத் தோப்பைப் பொட்டாகவும்**

**கரையோரத் தென்னைகளை**

**வளையல்களாகவும்**

**அணிந்து பார்ப்பவரைப்**

**பரவசப்படுத்தியது"** [99]

என்று சுட்டிக்காட்டுகின்றார்.

## 4.4.2. படிம அழகியல்

**"இமேஜ்" என்ற சொல்லிற்கு உருவம், படிமம், உருமாதிரி, ஏற்ற வடிவம், கருத்துரு ஆகிய பொருட்களை சென்னைப் பல்கலைக்கழகஆங்கிலத் தமிழ்ப் பேரகராதி தருகிறது".** [100]

"அறிவு நிலையிலும் உணர்வு நிலையிலும் எளிதில் விளக்க இயலாதவற்றை நொடியில் தெளிவாக்கி நம் கண் முன் நிறுத்த வல்லதே *படிமம்* என்று விளக்குகிறார் எஸ்ரா பவுண்ட். "வாசக மனத்திரையில் பளீரென ஓர் ஒளிச்சித்திரத்தை வரைந்து போகிற மாய ஓவியத் தூரிகைதான் படிமம்" என்கிறார் கவிஞர் சிற்பி.

காட்சியின் மூலம் நமக்கு அரிய செய்திகளைத் தருவதே படிமத்தின் சிறப்பு ஆகும். காட்சித்தன்மை உடையதாக அமையும் உவமை, உருவகம் கூட படிமமே ஆகும். வாக்காளர்களை மாலை கட்டும் நாராகப் படிமப்படுத்துகின்றபொழுது,

**"மலர்கள் கசங்கி**

**உதிர்ந்த பின்னர்**

**நார் மட்டும்**

**அடுத்த மாலை கட்ட**

**மீண்டும்**

**தேவைப்பட்டது"** [101]

என்கிறார் ஆசிரியர். வாக்காளர்களைக் கொண்டு வாக்கு பெறுகிறவர்களை நார்களைக் கொண்டு மாலை கட்டுபவர்களுடன் காட்சிப்படுத்தும் நேர்த்தி இங்கு வெளிப்படுகின்றது. கற்பைப் பறிகொடுத்த பெண்டீர், தம்மைத் தூக்கிலிட்டு மாய்ப்பதைக் காட்சிப்படுத்தும் பொழுது இறையன்பு ,

**"வண்டென்னும்**
**ஆண்**
**வந்து**
**வருடிச் சென்றதனால்**
**இந்த பூப்பெண்கள்**
**தூக்கிலிட்டுத்**
**தலை தொங்கி**
**உடல் வாடிக் கிடந்தன"** [102]

பூக்களோடு உருவகிக்கின்றார்.

சமுதாய நோக்கோடு படிமக் கவிதை படைக்கும் பொழுது ,

**"எங்கள்**
**கண்ணீரை மட்டும்**
**பன்னீராக்க முடிந்திருந்தால்**
**நாங்கள்**
**பணக்காரராயிருப்போம்"** [103]

என்ற புதிய சிந்தனை, ஏழைகளின் மீது இறையன்புவிற்கு இருக்கும் இரக்கத்தைக் காட்டுகிறது."நிறவெறிக்குக் கறுப்புக் கொடி" என்ற கவிதையில், காகம் பற்றிய பல படிமங்களை இறையன்பு தருகிறார். உலகில் கவிஞர்கள் அதிகம் பாடாத காகத்தை,

**"ஆகாயத் தோட்டியாய்**
**அழுக்குகளையெல்லாம்**
**அப்புறப்படுத்தும் உன்னை**
**எப்படியெல்லாம்**
**அவமானப்படுத்துகிறோம்?"** [104]

என்று கூறிவிட்டு காக்காய் குளியல், காக்காய் பிடிப்பு, காக்காய் வலிப்பென வையகத்தார் வைத பொதும், காகத்திடம் உள்ள சிறப்பை,

**"குறும்புக்காரக் குயில்களுக்கு**
**நீதானே அடைகாக்கும்**
**ஆதரவான செவிலித்தாய்"** [105]

என்றும் பாராட்டுகிறார். காகம் கறுப்பு என்பதால் நிறவெறிக்குக் கறுப்புக் கொடி காட்டுவதாகவும். காகத்தை ஆகாயத் தோட்டி என்றும் அடைகாக்கும் செவிலித்தாய் என்றும் படிமப்படுத்துகின்றார்.

## 4.4.3. குறியீட்டு அழகியல்

கவிதையில் சொல்லக்கருதிய ஒரு பொருளின் உண்மைத் தன்மையை ஏறத்தாழ அதையொத்த இன்னொரு பொருளின் துணையுடன் விளக்கும் உத்தியே குறியீடு எனப்படும். குறி என்பது ஒரு பொருளைச் சுட்டிக் காட்டுவது. குறியீடோ ஒரு பொருளுக்காகத் தானே அதனிடத்தில் நிற்பது. இறையன்புவின் கவிதைகள் பெரும்பாலும் மனிதனை, அவன் சந்திக்கிற சவால்களை, இன்னல்களை மையப்படுததியே அமைந்திருக்கின்றன. தமது அலுவலக பணியில் பல்வேறு மனிதர்களைச் சந்திப்பதால் ஆசிரியரின் சிந்தனை மக்களை மையப்படுத்தியே செல்கின்றது.

**"இங்கே புல்லுக்குப்**
**போய்ச் சேர**
**வேண்டுமென்பதற்காகவே**
**நெல்லுக்கு**
**நீர் திறந்து விடப்படுகிறது"** [106]

இக்கவிதையில், அரசால் அறிவிக்கப்படும் திட்டங்கள் உரியவர்களுக்குச் சென்று சேராமல், பணம் படைத்தவர்களிடமே போய்ச்சேர்கின்றது என்பது குறிப்பினால் உணர்த்தப்படுகின்றது. இதற்கு புல், நெல், நீர் போன்ற சொற்களைக் குறியீடுகளாகப் பயன்படுத்துகின்றார்.

புல் -- வசதி படைத்தவர்கள், நெல் -- ஏழைகள், நீர் -- திட்டங்கள்.

**"குளத்தின்**
**அழுக்குகளை அகற்ற**

**மீன்களை வளர்த்தனர்**

**இப்போது**

**மீன்களின் கழிவுகள்**

**மட்டுமே**

**அழுக்காய்**

**எஞ்சியிருந்தது" 107**

நம் நாட்டிலிருக்கும் குற்றங்களை அகற்ற காவலர்களை நியமித்தார்கள். குற்றவாளிகளோடு சேர்ந்து கொண்டு காவலர்களும் குற்றங்களில் ஈடுபட்டதால் குற்றம் இன்னும் அழியாமலேயே இருக்கிறது என்பதே குறியீடாகும். இதற்கு குளம், அழுக்கு, மீன் போன்ற குறியீட்டுச் சொற்களைப் பயன்படுத்தியுள்ளார் ஆசிரியர்.

குளம்-- நாடு , அழுக்கு-- குற்றம், மீன் --காவலர்.

**"தீபாராதனை தனக்குக் காட்டுவதாக**
**நினைத்துத்**
**தலையை நீட்டியது**
**விக்ரகத்தின் இடுக்கில்**
**ஒளிந்திருந்த பல்லி" 108**

குட்டித் தலைவர்கள் எட்டுத்திசையும் தம்மையே தலைவராக துதிப்பார்கள் என நினைத்து வீணாகுவதை ஆசிரியர் சுட்டிக் காட்டுகின்றார்..

## 4.4.4. அங்கத அழகியல்

அங்கதம் என்பது கவிதை உத்திகளில் சிறப்பான ஒன்று. கவிஞர்கள் இந்த உத்தியை வெறும் நகைச் சுவையை வெளிப்படுத்த மட்டும் பயன்படுத்துவதில்லை. நகையின் வழியே சிந்தனையைத் தூண்டுவதற்காகவே அங்கத உத்தியைப் பயன்படுத்துகின்றனர். இறையன்புவும் இந்த உத்தியைத் தமது கவிதைகளில் கையாண்டிருக்கிறார்.

விவசாயத்திற்குத் தண்ணீர் இல்லையென்றால், நடுரோட்டில் பானைகளைப் போட்டு உடைப்பது, மின்சாரம் இல்லையெனில் மெழுகுவர்த்தி ஏந்தி போராடுவது போன்றவை மனிதர்கள் காட்டும் எதிர்ப்புகள். அஃறிணையான நாய் அரசின் மெத்தனப் போக்கை,

**“எரியாத மின் விளக்கை**

**ஏளனம் செய்தது நாய்**

**தன் பின்னங்காலைத் தூக்கி”** [109]

*தன் பங்குக்கு* ஏளனம் செய்வதை இக்கவிதை அங்கதமாக்கியுள்ளது.

## 4.5. கவிதை – அணி

கவிதைக்கு அழகு அதனுடைய இசைமை. வாய்மொழி இலக்கியங்களில், பாடல்களை எளிதில் மனனம் செய்வதற்காக எதுகை, மோனை, முரண், இயைபு போன்ற நடையியல் உத்திகள் அதிகம் பயன்படுத்தப்பட்டிருக்கும். அவ்வகையில், இறையன்புவின் கவிதைகளில் மோனை, எதுகை, முரண், இயைபு, உவமை, உருவகம், சீரிய சொல்லாட்சி, இணையெதிர்ச் சொற்கள், அடைகள், சொற்சேர்க்கை போன்ற பல உத்திகள் காணக்கிடக்கின்றன. இது அவரின் மொழி ஆளுமையின் கூறாக அமைந்துள்ளது. இவை மட்டுமின்றி வித்தியாசமான உவமை, உருவகம், அணிகளும் கவிதைகளில் பயின்று வந்துள்ளன.

### 4.5.1. மோனை

முதல் எழுத்து ஒன்றி வரத் தொடுப்பது மோனை எனப்படும்.

#### 4.5.1.1. சீர் மோனை

சீர்தோறும் முதல் எழுத்து ஒன்றி வருவது சீர் மோனை.

**“நாற்றத்தின் நாற்றாங்காலான”** [110]

**“பகட்டான பட்டாடை பளபளப்பிலும்”** [111]

**“ஆற்றுப்படுத்தும் ஆற்றுநீர்”** [112]

**“பூச்சிகள் பாடும் பூபாளம் கேட்கும்”** [113]

**“வரவேற்பரையில் வரிசையாய்”** [114]

#### 4.5.1.2. அடி மோனை

அடிதோறும் முதல் எழுத்து ஒன்றி வருவது அடி மோனை.

**“புதைகுழி என நினைத்த வாழ்வு**

**புதையல் குழியான மகிழ்வு”** [115]

**“அகத்தியன் கமண்டலத்தை**

**அன்று நீ கவிழ்த்திருக்காவிட்டால்”** [116]

**"பரம்பரை சைவமா**

**பழக்கத்தால் சைவமா"** [117]

**"கோப்பைகள் பெற்றும் பரிசுகள் வென்றும்**

**கோட்டை விட்டவர் வாழ்வினில் உண்டு"** [118]

**4.5.2. எதுகை**

இரண்டாம் எழுத்து ஒன்றி வருவது எதுகை.

**" உலக வரலாறு கண்ட**

**கலகத் தகராறு"** [119]

**"விழி கொண்டு நானும்**

**வழியெங்கும் தேடுகிறேன்"** [120]

**"விழுந்து தாங்கும் பிள்ளைகள் வேண்டும்**

**விழுது தாங்கும் ஆலமும் அரற்றும்"** [121]

**"அனலால் மண்ணும் செங்கல் ஆனது,**

**தனலால் உண்ணும் பொங்கல் ஆனது"** [122]

**"தாவணிகளை ரசிக்கிற பருவத்தினருக்கு**

**தாவரங்களை நேசிப்பவன்"** [123]

இறையன்புவின் கவிதைகளில் இடம்பெறும் எதுகைகள் கவிதைக்கு கூடுதல் அழகைத் தருவதாய் அமைந்துள்ளன.

## 4.5.3. முரண்

ஒன்றுக்கொன்று முரணான சொற்கள் அல்லது தொடர் ஒன்றிணைந்து வருவது முரண் எனப்படும். இறைன்புவின் கவிதைகளில் முரண் தொடை விரவி வந்துள்ளது.

தற்கொலை எனும் கவிதையில்,

**"இறுதியில்**

**தன் கோழைத்தனத்தை**

**ஒத்துக் கொள்ள**

**அவனுக்கு**

**வீரம் வந்தது"** [124]

கோழைத்தனம் – வீரம் என்ற முரணான சொற்களும்,

மௌனத்தை உணர்த்த,

**"மௌனத்தைப் பற்றி**
**மணிக்கணக்காய்ப்**
**பேசினான்"** [125]

என்றும் மரணம் தந்த பிறப்பாய்,

**"ஒரு மூங்கிலின்**
**மரணத்தில்**
**கண் திறந்தது**
**ஒரு புல்லாங்குழல்"** [126]

என அழிவின் முடிவில் ஆக்கத்தையும் , உயிரைக் காக்கும் அமுதமே நஞ்சாவதை,

**"அன்பினால் கொடுத்தால்**
**எச்சிலும் அமிர்தம்**
**உண்மையால் அளித்தால்**
**நஞ்சும் ஔடதம்"** [127]

என்றும் ஒன்றுக்கொன்று எதிரான திசைகளை,

**"மேற்கிலிருந்து வீசுவதால்**
**கிழக்கில் திரள்கின்றன**
**உதிர்ந்த இலைகள்"** [128]

குறிப்பிடுகின்றார். மௌனம் – பேச்சு, மரணம் – ஜனனம், வாழ்வு – சாவு, அமிர்தம் – நஞ்சு, மேற்கு – கிழக்கு என ஒன்றுக்கொன்று முரணாக அமைந்த பல சொல்லாட்சிகளை இறையன்புவின் படைப்பில் காணலாம்.

## 4.6. அணி

இலக்கியத்திற்கு அழகு சேர்ப்பது அணி. ஒரு பொருளின் அழகைக் கண்டு அதை மற்றொரு பொருளின் அழகோடு ஒப்பிடுதல் உவமை எனப்படும். அறியாதவற்றை ஓரளவு அறியச்செய்வதற்கும், அறிந்தவற்றைச் சிறப்பிப்பதற்கும் உவமைகள் பயன்படுத்தப்படுகின்றன. படைப்பாளிகளின் படைப்பிற்குச் சுவையூட்டுவதாக உவமைகள் அமைவதால் பெரும்பாலும் எல்லாக் கவிஞர்களாலும் கையாளப்படுகின்றன. இறையன்புவும் வித்தியாசமான

பொருட்களை ஒப்புமையாக்கிக் கவிதை படைத்துள்ளார். பெண்ணின் உதட்டினை வருணிக்கும் பொழுது கோவைப்பழம், ரோஜா மலர் போன்றவற்றோடு ஒப்பிடும் சராசரி கவிஞரிலிருந்து இறையன்பு வித்தியாசப்பட்டு, காதலன் காதலியின் உதடுகளை ஹைக்கூ-லிமரிக் கவிதையோடு ஒப்பிடுவதாகக் கூறுகிறார்.

**"ஹைக்கூ கவிதைகளும்**
**லிமரிக் கவிதைகளும் கூட**
**அவள்**
**உதடுகளில் இருந்து**
**உயிர் பெற்று வந்தன"** [129]

என்று குறிப்பிடுவதிலிருந்து ஆசிரியரின் கவித்துவம் புலனாகின்றது.

## 4.6.1. வினை உவமை

தான் கொண்ட கொள்கையிலிருந்து விலக விரும்பாத தலைவன், மீறி விலகினால் தண்டவாளத்தை விட்டு விலகும் இரயிலுக்கு ஏற்படும் நிலையே தனக்கும் உண்டாகும் என்பதைக் குறிப்பிடுகையில்,

**"தண்டவாளத்திருந்து**
**நகர விரும்பாத ரயிலைப்போல**
**என் கொள்கையை விட்டு**
**விலகினாலே**
**மரணத்திற்கு நான்**
**மாலையிட்டதாக அர்த்தமாகிவிடும்"** [130]

என்று கூறுகின்றான். இதில் நகர, விலகல் என்ற வினை பயன்பாடு உள்ளதால் வினை உவமையானது.

## 4.6.1.1.பண்பு உவமை

கவிதையை நேசிப்பவர்கள் மென்மைப் பண்பைக் கொண்டவர்களாக இருக்கிறார்கள்.

**"கவிதையை நேசிக்கிறவர்கள்**
**நெஞ்சமும் கடற்பஞ்சைப் போல்**
**மென்மையாகிவிடுகின்றது"** [131]

மென்மையைக் குறிக்க இங்கு பஞ்சைக் குறியீடாக்கியுள்ளார் ஆசிரியர். பஞ்சு, நெஞ்சம் இரண்டின் பண்பும் இங்கு உவமையாகின்றது.

இறையன்பு இந்திய ஆட்சிப்பணி அலுவலர் என்பதால், நிர்வாகம் சார்ந்த உவமைகள் பல சிறப்பாக அமைந்துள்ளன.

**"சாலை மறியல் செய்பவர்களால்**
**நின்று போன பேருந்து போல்"** [132]
**"நிச்சயதார்த்தம் முடிந்தவுடனேயே**
**அவள் போக்கில்**
**வெற்றி பெற்ற வேட்பாளர் போல**
**பற்பல மாறுதல்"** [133]
**"பழுதடைந்த பேருந்து போல**
**நகர மறுத்தது நாக்கு"** [134]
**"தேசியமயமாக்கப்பட்ட வங்கிப் பணியில்**
**போளியில் இருக்கும் பூரணம் போல**
**பூரணமாய்க் காத்திருக்கும்"** [135]

சாலை, பேருந்து, பழுதடைந்த பேருந்து , தேசியமயமாக்கப்பட்ட வங்கி, வேட்பாளர் போன்றவை அரசினையும் அரசு சார்ந்த நிர்வாகத்தையும் குறிக்கின்றன.

### 4.6.2. உருவகம்

உவமை மட்டுமின்றி உருவகமும், சொற்பின்வருஅணியும் சிற்சில இடங்களில் இடம்பெறுகின்றன. மொழி பற்றிய ஓர் உருவகம்,

**"மொழியே பாத்திரம்**
**உறிஞ்சுபவர் வாயின் அமைப்பே**
**உரிய பாத்திரத் தேர்வுக்கு இலக்கணம்"** [136]

சொல்பின்வரு நிலையைக் குறிப்பிடுகையில்,

**"படிப்பென்று யார் வந்தாலும் பல**
**படி இறங்கி வந்து**
**உருப்படியான வழிகாட்டுதல்கள்**
**தருவது வழக்கம்"** [137]

என்று சுட்டுகின்றார்.

அன்றாட வாழ்வில் நாம் காணும் நிகழ்வுகளைப் பாமரனுக்கும் புரியும் வகையில் உவமைகளாக்கித் தருகின்றார் உவமைக் கவிஞர் இறையன்பு. எளிதில் விளங்கும் தன்மைக் கொண்ட இவ்வுவமைகள் உள்ளங்கை நெல்லிக்கனி போன்றவை. மேற்கூறிய அனைத்தும் இவரது சீரிய மொழிநடைக்கும் ஆளுமைக்கும் அணிசேர்ப்பதாய் அமைந்துள்ளன.

## 5. சிறுகதைகளில் ஆளுமை

சிறுகதைகள் குறைந்த நேரத்தில் படித்து முடிக்கக் கூடியதாய், படிக்கும் வாசகரின் உள்ளத்தைத் தட்டி எழுப்பக் கூடியதாய் அமைந்திருக்க வேண்டும்.

> **"கதை தொடக்கம் முதல் முடிவு வரை குதிரைப் பந்தயம்**
> **போன்ற விறுவிறுப்பை ஏற்படுத்த வேண்டும்."** [138]

என்பார் எட்கர் ஆலன் போ.

இறையன்பும், சிறுகதையின் வரையறைக்கு உட்பட்டு, வாசகரைச் சிந்திக்கத் தூண்டும் வகையில் நான்கு சிறுகதைத் தொகுப்புகளையும் இரண்டு குறுந்தகவல் தொகுப்புகளையும் வெளியிட்டுள்ளார்.

### 5.1. பாத்திரப் படைப்பு

படைப்பாளன் தான் வாழுகின்ற சமுதாயத்தில் நிகழும் பல்வேறு நிகழ்வுகளால் தன் மனதில் தோன்றும் வலிகளை, மகிழ்ச்சியை, எதிர்பார்ப்பை, உணர்ச்சியைப் படைப்புகளாக்குகின்றான். மனித வாழ்க்கையையும், மனித உணர்வுகளையும் ஒட்டிய படைப்புகள் மக்களால் பெரிதும் ஏற்றுக்கொள்ளப்பட அதில் இடம் பெறும் கதாப்பாத்திரங்களே காரணமாகின்றன. கதாப்பாத்திரங்களே, கதைக்கு உயிரோட்டத்தை அளிக்கின்றன.

> **"இலக்கியங்களில் இடம்பெறும் பாத்திரங்களின் குணங்களை**
> **ஆராயும் பொழுது அந்தக் கதை மாந்தர்கள் உலக மக்களின்**
> **நகல்களாகவே இருப்பது விளங்கும். அது படைப்பாளனின்**
> **மனநிலையையும் எடுத்துக்காட்டும்"** [139]

என்பார் சகுந்தலா. இக்கூற்று இறையன்பு கதைகளுக்கு சாலப் பொருந்தும்.

## 5.2. மூவகைச் சிறுகதைகள்

மனிதன் தன் அனுபவங்களை அடுத்த தலைமுறையினருக்குச் சொல்ல கதையை ஒரு கருவியாகப் பயன்படுத்துகின்றான். சிறுகதைகளை, மூவகையாக வகைப்படுத்துவார் திறனாய்வாளர் ஸ்டீவன்சன். அவை வருமாறு

- <u>கதைக் கோப்புக் கதை</u> (story of plot) கதைக் கருவைச் சிறப்பாகத் தேர்ந்தெடுத்து அதற்கேற்ற பாத்திரங்கள் அமையுமாறு செய்தல்
- <u>பாத்திரப் படைப்புக் கதை</u> (story of character) குறிப்பிட்ட கதை மாந்தரின் குணத்தை மையமாகக் கொண்டு அதனை விளக்கும் வகையில் நிகழ்ச்சிகளை அமைத்து எழுதும் கதை.
- <u>உணர்ச்சிப் பதிவுக் கதை</u> (story of Impression) படைப்பாளனின் உள்ளத்தில் எழுந்த உணர்வைச் சராசரி வாழ்க்கையில் அவன் கண்ட சூழலில் வெளிப்படுத்தும் கதை. ஸ்டீவன்சன் குறிப்பிட்ட மூவகையிலும் இறையன்புவின் சிறுகதைகள் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கன.

### 5.2.1. கதைக் கோப்புக் கதை

மரணம் என்பது விபத்து போல நிகழ்ந்து விடக்கூடியது. ஒருவர் செய்கின்ற தொழிலுக்கும் வாழ்க்கை முறைக்கும் தொடர்பில்லை என்பதை "***விபத்து***" கதை புலப்படுத்துகின்றது. சர்க்கஸ் கம்பெனியில் பார் விளையாடுபவன் பிரதீப். அவனை ஆபத்து நிறைந்த இத்தொழிலை விட்டு விட்டுத் தன்னுடன் கூடாரம் அமைக்க வருமாறு அவனது நண்பன் தாராதத் அழைக்கிறான். நண்பனின் அழைப்பை ஏற்க மறுத்த பிரதீப், தனது பார் விளையாடும் தொழிலையே தொடர்கின்றான். இதற்கிடையே கூடாரம் அமைக்கும் பணியில் எதிர்பாராத விதமாக மூங்கில் கழி தலையில் விழுந்து தாராதத் இறக்கிறான். நடைமுறை வாழ்வில் காணப்படும் எந்த ஒரு சிறிய நிகழ்வும் கதைக் கருவாய் அமையும் என்பதற்கு இதுவே சான்று.

தலைமுறை இடைவெளி என்ற கருத்தினை மையமாகக் கொண்டு எழுதப்பட்ட கதை "***வைக்கோல் கன்று***". ஆதரவற்ற நிலையில் பண்ணையாரிடம் வந்து சேரும் பொன்னன் தன் வாழ்க்கையை அவருக்கே அர்ப்பணித்து விடுகிறான். பொன்னனின் மகன்களைத் தன் சொந்த பேரன்களாக நினைத்து, பண்ணையார் அவர்களின் எல்லாத் தேவைகளையும் பூர்த்தி செய்கின்றார். வளர்ந்து ஆளான பின்னர் பொன்னனின் மகன்கள் பண்ணையாரை உதறிவிட,

பொன்னனோ தன் மகன்களை உதறிவிட்டு பண்ணையாரே வாழ்க்கை என்று வாழ்ந்து விடுகிறான். இக்கருவினை அணில்களின் செயல்களோடு ஒப்பிட்டுத் தலைமுறை இடைவெளியால் ஏற்படும் எதார்த்தங்களை உணர வைக்கிறார் இறையன்பு.

## 5.2.2.பாத்திரப் படைப்புக் கதை

கதையினைத் தரமுடையதாகவும் பயனுடையதாகவும் செய்வது பாத்திரப்படைப்பே ஆகும். கதையின் கரு, போக்கு போன்றவற்றை மறக்கும் பொழுது கூட பாத்திரங்கள் நம் நெஞ்சில் நீங்காமல் இடம் பெற, அப்பாத்திரத்துடன் நாம் ஒன்றிவிடுவதே காரணம். பாத்திரப் படைப்பிற்குப் படைப்பாளனின் சமூகவியல் சிந்தனையே அடிப்படையாகின்றது.

"***சுயம்***", "***வழுக்கை முகம்***", "***இன்னுமோர் இரவு***" ஆகிய கதைகளில் பாத்திரப் பண்பைத் திறம்பட உணர்த்த கனவினை ஒரு கருவியாகக் கையாள்கின்றார் ஆசிரியர். கனவினைக் குறிப்பிடும்பொழுது,

**"கனவுகள் என்பது நினைவுகள் நின்று கொண்டிருக்கும்**
**இன்னொரு விளிம்பு தானா? வரிசையாய் வெள்ளை நிழல்கள்**
**நெஞ்சில் வந்து மோதும் இயலாமையின் பிரதிபலிப்புகள் தானா?"** [140]

என்று வினா எழுப்பும் ஆசிரியர் கனவுகள் நம் ஆழ்மனத்தின் வெளிப்பாடே என்பதை உணர வைக்கின்றார்.

"***திருச்சிற்றம்பலம்***" என்ற கதையில், நடனம் யாருக்கும் பரம்பரைத் தொழிலில்லை. உண்மையிலேயே ஈடுபாட்டுடன் கடின முயற்சியுடன் பயிலும் ஒவ்வொருவரும் சிறந்த கலைஞனாக உருவாகலாம் என்ற கொள்கை உடைய நடனகுரு, தன் மகனுக்கு நடனம் கற்றுக் கொடுக்க மறுத்து விடுகிறார்.

**"எல்லோரையும் விடவும் அவனினும் திறமை வாய்ந்தவனை**
**விடவும் அவன் நன்றாக ஆட வேண்டும் என்ற எண்ணம் எட்டிப்**
**பார்த்து, மற்றவர்களுக்குக் குறைத்துச் சொல்லித் தர வைத்து,**
**தன்னைக் குருபீடத்திலிருந்து உருட்டி விடக் கூடும்"** [141]

என்று தன் மகனுக்கு நடனம் கற்றுக் கொடுக்காததின் காரணத்தைக் கூறுவதுடன், அவன் உண்மையான ஈடுபாடும் திறமையும் உடையவனாக இருந்தால், சிறந்த கலைஞனாக உருவாகுவான் என்று குரு கூறுவதன் மூலம் அப்பாத்திரப் படைப்பின் மேன்மை உணர்த்தப்படுகின்றது.

### 5.2.3. உணர்ச்சி பதிவுக் கதைகள்

"***மயானம்***" எனும் சிறுகதையில்,

**"எரிக்கப்படுவதும் புதைக்கப்படுவதும் சந்தோஷமான சமாச்சாரங்களாக மயானத்தில் கருதப்படும் பொழுது உயிர்களுக்கு அங்கு விலை ஏது?"** [142]

என்று தனது ஆதங்கத்தை வெளிப்படுத்துகின்றார் இறையன்பு.

"***அழுக்கு***" எனும் கதையில்,

**"தெரியாமலே பல உண்மைகள் இருப்பதனால்தான் உலகத்தில் சுழற்சி நடந்து கொண்டிருக்கிறது .அவற்றைத் தெரிந்து கொள்ளாமலே இருந்து விட்டால் ஆத்மா அழுக்கு படாமலே இருந்து விடும்"** [143]

என்ற உலக இயக்கத்தின் அடிப்படை நிலையினைக் கூறுகின்றார் ஆசிரியர்.

கதாப்பாத்திரங்களின் வழியாகத் தனது கருத்துக்களைப் படைப்பாளன் பேசுவதை "***தலை மாணாக்கன்***" கதை உணர்த்துகின்றது.

**"நாங்க கத்துக்கிற வித்தையெல்லாம் எங்களைக் காப்பாத்திக்கிறதுக்காகத்தான். எங்களுக்கென்ன ராஜ்ஜியம் பிடிக்கிற ஆசையா இருக்கிறது."** [144]

என்று குறிப்பிடுவதன் மூலம் ஏகலைவன் என்ற பாத்திரத்தின் வழி அக்காலத்தில் கல்வி உயர் சாதியைச் சேர்ந்த சிலருக்கு மட்டும் அளிக்கப்பட்டதையும் ஒடுக்கப்பட்ட சாதியைச் சேர்ந்த பலருக்கும் மறுக்கப்பட்டதையும் சுட்டிக் காட்டுகின்றார் ஆசிரியர்.

தாசில்தார் அலுவலகத்திற்கு விசிட் வரும் மாவட்ட ஆட்சியாளரை மையமாகக் கொண்டு புனையப்பட்ட கதைதான் "***விசிட்***". அந்த நாளில் தாசில்தார் அலுவலகத்தில் ஏற்படும் பரபரப்பும், பிற அலுவலர்களின் செயல்பாடுகளும் இறையன்புவின் அனுபவ வெளிப்பாடாக அமைந்துள்ளது. தாசில்தாரிடம்,

**"இந்தாங்க சாப்பாட்டுப் பில்" என்று பத்து ரூபாயைக் கொடுக்க, தாசில்தாரோ, "வேணாம் சார்" என மறுக்க, "அக்ஸெப்ட் இட்"** [145]

எனத் திணித்து விட்டுப் போகும் கலெக்டரின் மூலம் தான் வித்தியாசமான அரசு அதிகாரி என்பதை இறையன்பு நிரூபித்துள்ளார்.

வாழ்க்கை சிக்கல் மிகுந்தது. சிக்கல்களுக்குள் நடைபெறுவதுதான் வாழ்க்கை என்பதை உணர்ந்து கொண்டால் வாழ்வில் எதிர்பார்ப்பும் இல்லை. ஏமாற்றமும் இல்லை. இந்த வாழ்க்கைத் தத்துவத்தைப் புரிந்து கொள்ள முயற்சித்தாலே தொடர்ந்து போராட வலிமை கிடைக்கும். இதனைப் புரிந்து கொண்டவர்களாக ***"அழகோ அழகு"*** கதைத் தொகுப்பில் **"எட்டாது மலைப்படைப்பிரிவு"** நாயகன் பிரேம்சிங்கும், "***கைமுறுக்குக்காரி***" பொன்னம்மாவும் இருக்கின்றனர். குடும்பத்திற்காக இராணுவத்தில் படைத்தலைவனுக்குச் சமையல்காரனாகப் பணிபுரியும் பிரேம்சிங் தன் குடும்பத்தோடு, கணவனை இழந்த தனது தங்கையின் குடும்பச் சுமையையும் சேர்த்து சுமக்கிறான். அவன் தனக்கெனக் கொடுக்கும் மதுபானத்தைக் கூட, பாதி விலைக்கு விற்றுப் பணம் சம்பாதிப்பதும் குடும்பத்திற்காகவே என்பதை,

> **"தனக்கு ஒதுக்கப்பட்ட மதுபானத்தைக் கூடத் தான்**
> **பருகாமல் மற்றவர்களுக்குப் பாதி விலையில் விற்றுப்**
> **பணம் திரட்டிச் சேமிக்கும் நிர்பந்தத்தில் அவனிருப்பான்**
> **என அவருக்குத் தெரியும்".** [146]

என்று குறிப்பிடுவதிலிருந்து அறிய முடிகிறது.

கணவனை இழந்து நிர்கதியாக நிற்கும் பொன்னம்மா, தன் குடும்பத்தைக் காப்பாற்ற தான் கற்று வைத்திருந்த முறுக்குச் செய்யும் தொழிலை மனவுறுதியுடன் செய்கிறாள். பொன்னம்மா தைரியத்துடன் தலைநிமிர்ந்து நிற்க அவளின் சமையல் திறன் தக்க நேரத்தில் பயன்பட்டது ,

> **"தணலாகக் கொதிக்கும் வெப்பத்தில் வியர்வைத் தெப்பத்தில்**
> **நனைந்து கொண்டிருந்தாள். இந்த வியர்வையின் பெருக்கத்தால்**
> **கண்ணீரின் வருகையைத் தடுத்துக் கொண்டவள், பத்து**
> **வருடமாக அவளுடைய உழைப்பில் நிமிர்ந்து நிற்பவள்அவள்"** [147]

என்பதை இக்கதை வரிகள் உணர்த்துகின்றன.

> **"தற்காத்து தற்கொண்டான் பேணி தகைசான்ற**
> **சொற்காத்து சோர்விலாள் பெண்"** [148]

என்ற வள்ளுவரின் வாக்கினை அடியொற்றி நடப்பவளாய் பொன்னம்மா விளங்குகிறாள்.

பொதுவாக சிறுவர்களின் உலகம் மிகவும் மகிழ்ச்சியாகவும் ஆசைகள் நிறைந்ததாகவும் காணப்படும். "**வரம் தர வேண்டும்**" என்ற கதை நாயகன் சுதீர் வண்ணத்துப் பூச்சிகளை நேசிப்பவனாக, வண்ணத்துப்பூச்சியின் படிநிலைகளை அறிந்து உண்மையை உணர்பவனாக சித்தரிக்கப்பட்டுள்ளான்.

> **"இந்த மழையில் அவை நனையாதா? இறந்து போகாதா?** [149]

என்று காற்றடிக்கும் பொழுது கவலைப்படும் சுதீர், வண்ணத்துப்பூச்சியின் ஆரஞ்சு இறகுகளைப் பார்க்கையில்,

> **"அவன் உடம்பில் ஆரஞ்சு நிறத்தில் இறகுகள்**
> **முளைப்பது போல நினைத்தான்"** [150]

என்று கதை முழுவதும் வண்ணத்துப் பூச்சிக்கும், சிறுவனுக்குமான உறவு நிலையை சித்திரிக்கின்றார் இறையன்பு.

## 5.3. சிறுகதைகளில் உத்திகள்

கதைப்பின்னல் வலுவானதாகவும் கதையோட்டம் தொய்வின்றி விறுவிறுப்பாகவும் அமைய படைப்பாளன் பல்வேறு உத்திகளைக் கையாள்வதுண்டு. படைப்பாளன் தன் படைப்பில் தானே ஒரு பாத்திரமாக நின்று, தனது கருத்தை ஏற்றித் தானே பேசுவது போல அமைப்பது "தன்னுரை உத்தி" எனப்படும். அவ்வகையில் "**பேச்சு வார்த்தை**" எனும் கதையில் திருஞானம் தன் மனசாட்சியை வெளிமனிதனாக பாவித்து நாட்டின் வளர்ச்சியை, சிக்கலைப் பிற நாட்டோடு ஒப்பிட்டுப் பேசுவது போல அமைத்திருப்பது இறையன்புவின் தனிச்சிறப்பு.

கணவன் மனைவி இருவரிடையே ஏற்படும் பிரிவையும், அவ்விருவரின் மனநிலையையும் "**நண்பர்கள்**" எனும் கதை படம்பிடித்துக் காட்டுகிறது. கதையின் தொடக்கம் நிகழ்காலத்தில் தொடங்கி, பின் கதைப்போக்கின் வழியாகக் கடந்த காலத்திற்கு கொண்டு செல்லப்பட்டிருப்பது இறையன்புவின் கதை புனைவுத் திறனைப் புலப்படுத்துகின்றது.

"**உயிர்த்தெழல்**" கதையில் இறந்து போன கதிர், மீண்டும் உயிர் பெற்று குடும்பத்தாரிடம் பேசுவது போல அமைக்கப்பட்டிருப்பது, இறந்தவர் உயிரோடு திரும்பி வந்தால் அவரின் மனநிலை எவ்வாறு இருக்கும் என்ற எதார்தத்தைக் காட்டுதாய் அமைந்துள்ளது.

## 5.4. மனிதநேய வெளிப்பாடு

இறையன்புவின் கதைகள் பெரும்பாலும் அவரது மன உணர்வுகளைப் பதிவு செய்வதாய் அமைந்துள்ளன. பல்வேறு தளங்களில் தனது ஆட்சிப் பணியை மேற்கொண்ட இறையன்பு, அங்கு நடைபெற்ற சம்பவங்களைத் தன் மனதின் வெளிப்பாடாகக் கதை வடிவில் உருவாக்கிக் கொடுத்திருக்கிறார். இவரது படைப்புகளில் மனிதநேயச் சிந்தனை வெளிப்படுவதைக் கண்கூடாக அறிய முடிகின்றது.

"**இரங்கல்**" எனும் கதையில், இந்திய ராணுவத்தில் பணியாற்றி எதிரிகளால் தாக்கப்பட்டு இறந்து போன ஆறுமுகம், உள்ளூரில் சாக்கடை அடைப்பைச் சரிசெய்யும் பொழுது இறந்துபோன முனியாண்டி என இருவேறு கோணங்களில் மனித எண்ணங்களைப் பதிவு செய்கின்றார் இறையன்பு.

ஆறுமுகத்தின் உடலுக்குச் சகலவித மரியாதையும் செய்யப்படுகின்றது. ஆனால் முனியாண்டியும் நாட்டுக்காகத்தான் உயிர் விட்டான். எனினும், அவனுக்கு எவ்வித மரியாதையும் இல்லை என்பதை மிகத் தெளிவாக வெளிப்படுத்தியுள்ளார் ஆசிரியர்.

முனியாண்டியை, சாக்கடையின் அடைப்பினை நீக்கச் சொன்ன சந்தானத்திற்குக் குற்ற உணர்வு. தான் சொல்லித்தானே முனியாண்டி அப்பணியில் ஈடுபட்டான்.

> **"அப்படியே விட்டிருந்தால் நிதானமாகச் சுத்தம் செய்திருந்தால் என்ன**
> **ஆகியிருக்கும்? பத்திரிக்கையில் எழுதியிருப்பார்கள். அமைச்சர்**
> **திட்டியிருப்பார். அவ்வளவுதானே! அடுத்த நாள் அவரவருக்கு**
> **இருக்கும் பிரச்சனையில் இதை மறந்தே போயிருப்பர்.இப்படி**
> **ஒரு நல்ல மனிதரைப் பலி கொடுத்திருக்க வேண்டாமே"**[151]

என்று முனியாண்டிக்காக சந்தானம் வருந்துவதாகக் காட்டுவது ஆசிரியரின் மனித நேயத்தை வெளிப்படுத்துவதாய் அமைந்துள்ளது.

ஓர் இறப்பைக் கண்டு அவர்களின் உறவினர்கள் மனங்கலங்குவது இயற்கை. பழநியும் அவனது மனைவியும் இறந்து கிடப்பதைக் கண்டு மாவட்ட ஆட்சியருக்கே அழுகை வருவதுதான் மனிதநேய வெளிப்பாடு. இதனை,

> **"அவர்கள் கதறியதும் அலறியதும் எனக்கு அழுகையாக இருந்தது"** [152]

என்று மாவட்ட ஆட்சியர் கூறுவதாகப் பதிவு செய்துள்ளார் இறையன்பு. பழநி தன் சக கூட்டத்தினரை ஏமாற்றி விட்டான் என்றபொழுதும் இறந்த அவனைக் குறவர்கள் தவறாக எண்ணிவிடக் கூடாது என்பதில் மாவட்ட ஆட்சியர் கவனமாக இருக்கிறார். இதனை,

> **"ஒரு வாரமாக ஏதேனும் ஒரு வகையில் பார்வதிபுர மக்களுடைய கடனைத் தள்ளுபடி செய்யும் முயற்சியில் நான் ஈடுபட்டிருந்தேன். பழநியின் இறப்பு, அந்த மக்களிடம் பரிதாப உணர்வையும் இழப்பையும் ஏற்படுத்த வேண்டுமே தவிர மனக்கசப்பை உண்டு பண்ணக் கூடாது என்பதில் குறியாயிருந்தேன்"** [153]

என்று மாவட்ட ஆட்சியர் கூறுவதாய்க் காட்டுவதிலிருந்து உயிரோடு இல்லாத ஒருவரின் மீதான தனது மனிதநேய வெளிப்பாட்டை வெளிப்படுத்தியுள்ளார் இறையன்பு.

## 6. குறுந்தகவல் கதைகள்

இயந்திரமயமான வாழ்வில் படிக்க மட்டுமின்றி இன்றியமையாத பணிகளைச் செய்யக்கூட நேரமின்றி தவிக்கும் இளைய தலைமுறையினருக்குத் தனது அனுபவங்களிலிருந்தும் வாசிப்பிலிருந்தும் பெற்ற சிந்தனைகளைக் குறுங்கதைகளாக்கி அவர்களை உள்ளோக்கிப் பார்க்கச் செய்கிறார். நீதிகளைச் சொல்லிக் கொடுக்கத் தவறிய இக்கால கட்டத்தில், நீண்ட கதைகளைக் கேட்கும் பொறுமையும் நேரமும் இல்லாத பிள்ளைகளிடத்தில் குறுங்கதைகளைக் கொண்டு சிந்திக்கத் தூண்டுகின்றார் இறையன்பு.

உரைநடையிலும் தத்துவ தெறிப்புகள் உண்டு என்பதை, "உயர்ந்த இசைக்கு மலிந்த மூங்கிலே உதடுகள்", "உனக்கான வாசகத்தை நீதான் தேட வேண்டும்", "இறைமையை அடைய இடைத்தரகர் எதற்கு" போன்ற வரிகள் உணர்த்துகின்றன.

ஒருவன் எவ்வளவுதான் அழகும் தகுதியும் பெற்றிருந்தாலும் பிறரிடம் பேசுவதற்கு அவனிடம் இன்சொல் இல்லையாயின் அவன் வறுமையுடையவன் ஆவான். புற அழகை அவனது தீய குணம் மறைத்து விடும் என்பதை,

> **"தன்னருகில் வளர்ந்திருந்த எருக்கஞ்செடியைப் பார்த்து ரோஜா ஆணவத்துடன் சொன்னது. நீயெல்லாம் எதற்காகப் பிறந்தாயோ? உன் முள் குத்தியவர்களுடைய சீதாம்பை எடுக்க என் காம்பின் பால் ஊற்றுவதற்காகப் பிறப்பெடுத்தேன்.ரோஜா மௌனம் சாதித்தது"** [154]

என்று கூறுவதிலிருந்து ஆணவம் நம்மை அழிவிற்குக் கொண்டு செல்லும் என்பதும் எல்லா உயிர்களும் காரண காரியத்துடனேயே படைக்கப்பட்டுள்ளதும் புலனாகின்றது.

ஒரு கருத்தைத் தெரிவிக்க, எளிமையான சொற்களையும் மக்கள் அன்றாட வாழ்வில் பயன்படுத்தும் சொற்களையும் அடுக்கியோ, இயைபாகவோ, முரணாகவோ, பேச்சுவழக்காகவோ கையாளும் பொழுது அது மக்களைச் சென்றடைய ஏதுவாகின்றது.

## 6.1. சொல்லடுக்கு

ஒரே சொல் அடுக்கி வருவது சொல் அடுக்காகும்.

**"அருகருகே முளைத்திருந்த முள்செடியும்**
**பளபளப்பாய் இருந்த அழகுச் செடியும்"** [155]

**"வளர்த்தவர்களைப் பார்த்து வாலாட்டி வாலாட்டி நீங்கள்"** [156]

**"எதிரெதிரே இழுத்து ஒரே தொல்லை**
**எக்கச்சக்க இழுபறி"** [157]

**"மிகமிக நேர்த்தியாக மரச்சாமான்களை"** [158]

**"எல்லா மாணவர்களும் பக்கம் பக்கமாக"** [159]

போன்றவை ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறுபதம் போன்று அமைந்துள்ளன.

## 6.2. முரண்

ஒன்றுக்கு ஒன்று மாறுபட்ட இரு வேறு சொற்களை ஒரே இடத்தில் வருமாறு அமைப்பது முரண்.

**"பொய்யில் பெரிய பொய்**
**சின்ன பொய் உண்டா?"** [160]

**"உண்டு கருப்புப் பொய்,**
**வெள்ளைப் பொய்"** [161]

**"மகிழ்விக்கச் சொல்வது**
**இனிப்புப் பொய் அவர்களைத் தளர்வடையச் சொல்வது**
**கசப்புப் பொய்"** [162]

**"நீ அழிப்பவன் நான் காப்பவன்"**
**நீ உயிர்களைக் குடிப்பவன்**

**நான் காப்பாற்றுபவன்"** [163]

**"………முதல் வீட்டுப்**

**பணியாளர்கள் சோர்வுடனும்**

**இரண்டாம் வீட்டுப் பணியாளர்கள்**

**மகிழ்ச்சியுடனும் செல்வதைப் பார்க்க"** [164]

போன்றவற்றில் பெரிய-சின்ன, கருப்பு-வெள்ளை,இனிப்பு-கசப்பு, அழிப்பவன்-காப்பவன், சோர்வு-மகிழ்ச்சி போன்ற சொற்கள் ஒன்றுக்கொன்று முரணாய் அமைந்தபொழுதும் சுவையூட்டுவனவாய் அமைகின்றன

## 6.3. பேச்சு வழக்குச் சொற்கள்

மக்கள் தம் அன்றாட வாழ்வில் பயன்படுத்தும் சொற்களையே, படைப்பாளரும் பயன்படுத்தும்பொழுது, மக்களை எளிதில் கவரும் விதமாய் அது அமைந்துவிடுகின்றது.

**"கோவிலுக்குள்ளே ஒரே நேரத்தில் கும்பிடச் சென்றனர்"** [165]

**"சொத்தை எல்லாம் காப்பத்திக் கொடப்பா"** [166]

**"உண்டியலுக்குள் பத்து ரூபாய் நோட்டைத் திணித்தார்"** [167]

பேசுவதையும் எழுதுவதையும் தொழிலாகச் செய்பவருக்கிடையே பேச்சைத் தவமாய் எழுத்து வேள்வி செய்பவர் இறையன்பு. ஒரு முறை கூறிய தகவல்களை மறுமுறை வேறு தலைப்புகளில் கூறும் பழக்கமில்லாதவர் இறையன்பு. அதற்கான காரணத்தைச் சொல்கையில்,

**"அகல வாசிப்பதும் ஆழச் சிந்திப்பதும் அவரின் கையிருப்பில்**

**அதிகத் தகவல்களின் எண்ணிக்கையை பெருக்கிக் கொண்டே**

**போகின்றன"** [168]

என்கிறார் சுந்தர ஆவுடையப்பன்.

இறையன்புவின் பேச்சு மொழியிலும் எழுத்து மொழியிலும் ஒருவித கம்பீரம் மிளிர்வதையும், எழுத்தாளுமை, வீரம், விவேகம், நேர்மை வெளிப்படுவதையும் உணர முடிகிறது. பாரதியின் மொழியாளுமையில் இருந்த ஞானச்செருக்கு இறையன்புவின் உரைநடையில் மென் கவிதையாய் நடைபோடுவதைக் காண

முடிகின்றது. இறையன்புவின் மொழிநடையைப் பற்றி மணிபாலா என்பவர் குறிப்பிடுகையில்,

**"அறிவுரை, உபதேசம் என அரிவாளாக இல்லாமல் அறிவால் உணரச் செய்யும் எளிய இனிய நடை. சோம்பல் சாட்டையைப் பற்றி இழுத்துக் கிழித்து வற்புறுத்தாமல், மனம்தானே சட்டையைக் கழற்றிப் போட்டுவிட்டுப் புத்துணர்வென்னும் புதுச்சட்டை போட்டுக் கொள்ளச் செய்யும் பக்குவ நடை. கண்களை மூடிக்கொண்டு ஏகாந்தமாய் ஆழ மூச்சிழுத்து நுரையீரல் பூ மலர நூறு நறுமணம் உட்சென்ற பரவசம். சொற்கள் வழி ஆறாம் அறிவைச் சுளுக்கெடுத்து அடித்துத் துவைக்கும் *மனச்சலவைக் கட்டி*. அவரின் அற்புத நடை"** [169]

என்று பாராட்டுகின்றார்.

## 7. இலக்கியத்தின் கூறு – நாவல்

சமுதாய நிகழ்வுகளைப் பதிவு செய்யும் இலக்கிய வடிவமாக நாவல் இருக்கின்றது. மக்களின் மாற்றங்களை, போராட்டங்களை அறிவிக்கும் காலச்சங்குகளே நாவல்கள் என்பர். சமூக நாவல்கள் குறித்து தா.வே. வீராசாமி குறிப்பிடுகையில்,

**"சமுதாயத்தால் படைக்கப் பெறும் இலக்கிய வகைகளுள் ஒன்றான நாவல்கள், தம்மை வெளிப்படுத்திய சமுதாயத்தையும் அது அவ்வப்போது அடைந்து வரும் மாற்றங்களையும் காட்டத் தவறுவதில்லை. எனவே தமிழ் மக்களிடையே காணும் மாற்றங்களை அறிவிக்கும் காலச்சங்குகள் நாவல்கள் எனலாம்".** [170]

கூறுவதும் ஏற்புடையதே.

### 7.1. நாவல் - விளக்கம்

நாவல் என்பது நாம் வாழும் காலத்தின் சமூகச் சூழலின் உண்மையான முழுமையான பிரதிபலிப்பு. நாவல் என்ற ஆங்கிலச் சொல்லுக்குப் புதுமை என்பது பொருள். கவிதைக் கலையின் இடத்தை உரைநடை பிடித்துக் கொண்ட பொழுது, உரைநடையின் வளர்ச்சியால் தமிழ் மொழி பெற்ற புத்தாக்கமே புதினமாகும். நாவல் குறித்து மு.வரதராசனார்,

**"ஒரு சிறந்த நாவல் பொதுமக்களுக்கு வெறுங்கதையாகவும் அறிஞர்களுக்குக் கருத்து விளக்கக்கதையாகவும் சற்று ஆழ்ந்து**

**உணரவல்லவருக்கு அனுபவத்தால் தெளியும் உண்மை விளக்கமாகவும் அமையும்"** 171

கூறும் கருத்து நாவலுக்கான இலக்கணத்தைத் தருகின்றது.

## 7.2. இறையன்புவும் நாவலும்

மக்களின் வாழ்க்கையை, வாழ்க்கையில் அவர்கள் சந்திக்கும் போராட்டங்களை, அதன் மூலம் கிடைக்கும் படிப்பினைகளை இறையன்பு கதையோட்டத்தோடு, கதை நிகழ்வோடு இரண்டறக் கலந்து, படிப்பவர் உள்ளத்தில் பதிய வைக்கிறார். நாவல் இலக்கியத்தின் உயிரோட்டம் கெடாமல் மக்களின் வாழ்க்கையை விளக்கும் திறன் அவரது எழுத்துகளின் வழி புலப்படுகின்றது.

## 7.3. புதினப் பெயர்கள்

பொதுவாக புதினங்களின் பெயர்கள், அதில் இடம் பெறும் பாத்திரங்களின் பெயரைக் கொண்டோ அல்லது கதைக் கருவை மையமாக வைத்தோ அமைக்கப்படும். இறையன்புவின் முதல் நாவலான **"ஆத்தங்கரை ஓரம்"** என்ற புதினம் ஆத்தங்கரை ஓர மக்களின் வாழ்வியல் சார்ந்து காரணப் பெயராய் அமைந்தது. இரண்டாவது நாவலான **"சாகாவரம்"** சாகின்ற வரம் பெற்றுச் சாகும் வாழ்வில் சாகாவரம் பெறும் முயற்சியில் வினைத்தொகை ஆயிற்று. மூன்றாவது நாவலான **"அவ்வுலகம்"** இவ்வுலகத்திற்கு ஆகி வந்த இடவாகு பெயராயிற்று.

## 7.4. கதைக்கரு

வீட்டுக்கு அடித்தளம் எத்தனை முக்கியமோ அத்துணை முக்கியமானது கதையின் கரு. ஒரு சமூகப் பிரச்சனையோ, தனிமனித உணர்வினையோ, மரணப் போராட்டத்தையோ மையமாகக் கொண்டு அது தொடர்பான நிகழ்வுகளுடன் கதையானது பின்னப்படும் பொழுது அது சிறந்ததாக அமையும். அவ்வகையில் இறையன்புவின் மூன்று நாவல்களும் மூன்று விதமான கருவினைக் கொண்டதாய் அமைந்துள்ளன.

### 7.4.1. ஆத்தங்கரை ஓரம்

பெயரிடப்படாத ஆற்றில் பெரிய அணைகட்டத் திட்டமிடப்படுகிறது. இதனால் இயற்கை வளம் மட்டுமின்றி பல உயிரினங்களும் அழிந்து போகுமென ஊர் மக்கள் வாதிடுகின்றனர். "*ஏழைச் சொல் அம்பலம் ஏறாது*" என்று அதிகார வர்க்கம் செயல்படுகிறது. இறுதியில் வெள்ளம் வர கிராமம் அழிந்து

போய்விடுகிறது. இந்நாவலுக்கான கதைக் கருவினை இறையன்பு தனது சொந்த அனுபவங்களால் பெற்று எழுதியதால், அந்நாவல் முழுதும் உயிரோட்டம் மிக்கதாய் தொடர்கிறது. நாவலாசிரியர் ஆற்றின் பெயரைக் குறிப்பிடாதபொழுதும் கதையின் சூழலும் அதில் இடம் பெறும் பாத்திரங்களின் பெயரும் ஆறு இன்னதென்று வாசகனுக்கு அடையாளம் காட்டி விடுகின்றது. இறையன்புவும் தனது இணைய தளச் செய்தியில் இந்நாவல் பற்றிக் குறிப்பிடும்பொழுது

> **"இந்திய ஆட்சிப் பணிக்கான பயிற்சி பெற்ற போது, நர்மதை**
> **நதிக்கரையில் புதிதாகக் கட்டப்பட்ட அணையை ஆய்வு**
> **செய்யச் சென்ற போது ஏற்பட்ட தாக்கங்களை மையமாக**
> **வைத்து இதயம் பேசுகிறது இதழில் வெளிவந்த தொடரே**
> **ஆத்தங்கரை ஓரம் நாவலாக வடிவம் பெற்றது"** [172]

என்கிறார். நாவலைப் படிக்கும் வாசகர் கண்முன் சித்தூர் கிராமம் படமாக விரிய, காட்சிகள் எழுத்துகளாக மாறித் தொடர்ந்து செல்கின்றன.

சுதந்திரப்போராட்ட வரலாறு போல இந்தக் கிராமத்தின் பின்னணியிலும் நிறைய பேருடைய போராட்டங்களும் சுயநலமற்ற தொண்டும் தியாகமும் வழிந்தோடுகின்றன.

### 7.4.2. சாகாவரம்

சிறந்த படைப்புகள் முதல் வரியில் தொடங்கி கடைசி வரியில் முடிந்து விடுகின்றன. இறையன்புவின் சாகாவரம் என்ற நாவல் "முடிந்து விட்டது. இனியொன்றும் இல்லை" என்று தொடங்குகிறது. "அது மரணமற்ற மரணத்தின் சாயல். பார்வையற்ற வாழ்வின் ஆரம்பம்" என்பது நாவலின் கடைசி வரி. "*முடிந்து விட்டது* "என்று தொடங்கி "*ஆரம்பம்* "என்ற கடைசிச் சொல்லுடன் சாகாவரம் முடிகிறது.

மனித வாழ்வு எப்போதும் முடிவின்றி உயிர்த் துடிப்புடன் இயங்க முடியுமா? ஆரம்பம் என்பது எது? முடிவு என்பது எது? இயக்கமற்றுத் தேங்குவது *சிரஞ்சீவி* என்ற பெயருக்குப் பொருத்தமாகுமா? போன்ற கேள்விகளுக்கு விடை தேடும் அறிவுப் பயணம்தான் சாகாவரம் என்ற நாவல்.

> **"இன்று யார்? என்ற கேள்வியுடன் உதயமாகும்**
> **ஒவ்வொரு நாளும் நரகம்தான்".** [173]

இக்கேள்வியின்றி உதயமாகும் நாளே இல்லை என்பதே மகத்தான மானுடச் சோகமாகும். "புனரபி ஜனனம் புனரபி மரணம்" – பிறப்பதும் இறப்பதுமே மானுட வாழ்வு ஒருவர் இறவாது வாழ விரும்புகிறார். சாகாவரம் வேண்டித் தேடி அலைகின்றார். வரம் கிடைத்ததா என்பதே நாவல். வாழ்வின் முடிவாக மரணத்தைக் கொள்வதா அல்லது மரணம் என்பது வேறொன்றின் துவக்கமா என்பது விடையற்ற கேள்வி. மரணமற்ற வாழ்வென்பது மானுடத்தின் கனவு. ஒரு வேளை அக்கனவு பலிக்குமாயின் அதன் பின் அஞ்சி வெறுத்த அதே மரணத்தை அழுதும் தொழுதும் கேட்டுப் பெறும் நிலை வரும் என்பதை இந்நாவல் ஆழமாய்ச் சுட்டுகின்றது.

### 7.4.3. அவ்வுலகம்

மண்ணுலக வாழ்வின் தவறுகளைச் சுட்டிக் காட்டி மேலுலக வாழ்வில் நாம் அடையப் போகும் துன்பங்களை விளக்கி உரைப்பதே நம் ஆன்மீக மரபு. ஆனால், மேலுலக அனுபவங்களைச் சுட்டிக்காட்டி மண்ணுலக வாழ்க்கையைப் புதுப்பித்துக் காட்டும் புதிய முயற்சியே அவ்வுலகம் நாவல். மரணம் குறித்த கேள்வியில் தொடங்கும் நாவல், மரணம் குறித்த தெளிவில் நிறைவு பெறுகிறது.

மரணத்திற்கு பிறகு மேலுலகம் சென்று, தாம் உயிரோடு இருந்தபொழுது மண்ணுலகில் சந்தித்த மனிதர்களை மேலுலகத்தில் காணும் பொழுது, தாம் தவறாகப் புரிந்து கொண்டவை சில சரியானவை என்றும் சரியானவையாகப் புரிந்து கொண்டவை பல தவறானவை என்று கதாப்பாத்திரம் உணர்ந்து கொள்வதாக நாவல் விரிவடைகிறது.

அவ்வுலகம் என்றால் என்ன? அப்படி ஒன்று இருக்கிறதா? என்ற விடை தெரியாத கேள்வி மனிதன் தோன்றிய காலத்திலிருந்தே தொடர்ந்து கொண்டு தான் இருக்கிறது. இதற்கு விடை காணவே மதங்களும் தொடர்ந்து பயணம் செய்கின்றன. "மனிதன் எதிர்கொள்ள வேண்டிய ஒரு உலகம் அவனுக்குள்ளேயே இருக்கின்றது. மனசாட்சி எனும் இருண்ட குகைக்குள் அவனது உலகம் ஒளிந்திருக்கிறது. இருள் எனத் தோன்றும் மரணமே மனிதனுக்கு மகத்தான வெளிச்சத்தைக் கொண்டு வரும் அற்புதத்தைப் பற்றிப் பேசுகின்றது" அவ்வுலகம் நாவல்.

அவ்வுலகம்,

> **"இரவு பகல் என்ற பேதத்தைக் கடந்தது. அது காலப் பரிமாணத்தைத் தாண்டி விரிந்திருக்கும் "** [174]

என்றும்

> " ஒவ்வொருவரின், குணத்திற்கும் பண்பிற்கும்
> புவியில் அவரின் நடத்தைக்கு ஏற்ப அவ்வுலகத்தில் அவர்களுக்கு
> முறையான வசதியும், சிறப்புச் சலுகையும் வழங்கப்படுகிறது" [175]

என்றும் கூறுவதன் மூலம் அவ்வுலகம் பற்றி மேலும் அறிந்து கொள்ளும் ஆவலைத் தூண்டும் வகையில் நாவல் அமைந்துள்ளது. இறந்து போன ஒரு மனிதன் அவ்வுலகத்தில், தன்னோடு பூமியில் பழகிய மனிதர்களைச் சந்தித்து, உண்மை நிலையை எடுத்துக் கூறுவதாய் அமைந்த இப்புதினம் இறையன்புவின் புதிய முயற்சி.

## 7.5. கதைப் பாத்திரங்கள்

புதினத்தில் இடம்பெறும் கதை மாந்தரைப் பொறுத்தே புதின இலக்கியம் வெற்றி பெறுகின்றது. நல்ல புதினங்கள் கதை மாந்தர்களின் படைப்பினாலேயே தலைசிறந்து விளங்குகின்றன.

கதைக்குக் கரு எவ்வளவு முக்கியமோ அத்தனை முக்கியம் அதில் இடம்பெறும் பாத்திரங்கள். படைப்பாளன் தனது சிந்தனைகளை, தான் பேச நினைத்ததைத் தனது கதாப்பாத்திரத்தின் வழியாகப் பேசுகிறான். அவ்வகையில் ஆத்தங்கரை ஓரம் நாவலில் இறையன்பு தனது பிம்பமாக "சுதீர்" கதாப்பாத்திரத்தைப் படைத்துள்ளார். பயிற்சி ஆய்வாளராக, ஒரு பார்வையாளனாக மட்டுமே நர்மதைப் பகுதிக்குச் சென்ற இறையன்பு, போராட்டத்தின் நியாயங்களுக்குள் புகுந்து தன்னையே சுதீர் என்ற பாத்திரமாகப் புகுத்தியுள்ளார். அரசின் கட்டுப்பாட்டுக்குள் இயங்கும் அதிகாரியான தன்னால், அரசு கொண்டு வரும் திட்டங்களின் சாதக பாதகங்களை வெளிப்படையாக எதிர்த்துக் கருத்துக் கூற முடியாத நிலையில், கதாப்பாத்திரத்தின் பின்னால் மறைந்து நின்று பேச முனைந்திருக்கிறார் ஆசிரியர்.

### 7.5.1. ஆத்தங்கரை ஓரம்- சிமன்

நர்மதை ஆற்றின் குறுக்கே அணைகட்ட முடிவெடுக்கப்பட்டபொழுது, அணை கட்டுவதால் ஏற்படும் சுற்றுச்சூழல் பாதிப்புகளையும் அங்கு வாழும் பழங்குடியின மக்களுக்கான வாழ்வாதாரம் பாதிக்கப்படும் என்பதற்காக அதனை எதிர்த்துப் போராட்டத்தில் ஈடுபட்ட சமூக ஆர்வலர் மேதா பட்கர். மேதா பட்கரே ஆத்தங்கரை ஓரம் நாவலில் ராதா படங்கராகச் சித்தரிக்கப்பட்டுள்ளார். தனது

கிராமத்தைக் காக்கத் துடிக்கும் இளைஞன் சிமன், தனது கிராமத்திற்காகத் தன்னையே கரைத்துக் கொண்ட கோவிந்தபாய் போன்றோர் புதினத்துக்குச் சிறப்பு செய்யும் கதை மாந்தர்களாவர்.

### 7.5.2. சாகாவரம் - நசிகேதன்

சாகாவரம் நாவலுக்குப் பாத்திரத்தைப் படைத்த இறையன்பு நசிகேதன் என்று பெயர் சூட்டியுள்ளது அவர் தத்துவ இயலில் ஊறித் திளைத்தவர் என்பதை உணர்த்துகின்றது. நாவலுக்குள் பயணப்பட்டால், கடா உபநிடதம் பற்றிய வாசிப்பு வருகிறது. மரணம் பற்றிய செய்திகளும் கதைகளும் உள்ள உபநிடதத்தில் நசிகேதன் என்ற சிறுவன் வருகிறான்.

செஞ்சோற்றுக்கடனுக்காக உயிரைச் செருப்பாக்கித் தேய்க்கிற பாத்திரத்துக்குக் க்ர்ணன் என்று பெயரிடுவது போல், இறையன்பு தன் நாவல் பாத்திரத்திற்கு நசிகேதன் என்று பெயர் சூட்டியிருப்பதில் தத்துவசாயலும் குணாம்சமும் இருக்கிறது. நாவலுக்குள் அறிவார்ந்த யோக்கியனை வார்த்தைப் படுத்துகிறபோது "சிந்திக்கிறவன்" என்கிறார் ஆசிரியர். கபீர், பார்த்திபன், கோபி, குணா, ரூப், பிரக்ஞா, ஞானி போன்றோர் கதைக்கு வலு சேர்க்கும் பாத்திரங்களாவர்.

### 7.5.3. அவ்வுலகம் -திரிவிக்ரமன்

திரிவிக்ரமன் என்ற பாத்திரத்தின் இளமை முதல் முதுமை வரையிலான வாழ்வை அவரது மரணத்தைக் கண் கொண்டு நோக்குகிறது அவ்வுலகம் நாவல். திரிவிக்ரமன் என்ற ஒற்றைக் கதாபாத்திரத்தைச் சுற்றியே கதை நகர்கின்றது. நிகழ்தல்கள் கால வரிசைப்படி கையாளப்படாமல் அவை உணர்கின்ற வரிசையில் அடுக்கப்பட்டிருக்கின்றன. இந்தக் கலைத்தல் மிகவும் சுவாரசியமானதாக அமைந்துள்ளது. அவ்வுலகத்தில், மனிதர்கள் பலவிதம் என்பதைத் திரிவிக்ரமன், காளிதாஸ், ஸ்ரீநாத், போலி உபதேசி, தோழி சாயா, உயர் அதிகாரி, சுயநலவாதி சேகர், குழந்தை சத்யகாம், கங்கா போன்ற பாத்திரங்கள் உணர்த்துகின்றன. இவர்களை மேலுலகில் திரிவிக்ரமன் சந்திக்கும் பொழுது நிகழும் நிகழ்வுகள், மனிதர்களின் உண்மை நிலையைப் புரிய வைக்கின்றது.

## 7.6. கதை கட்டமைப்பு

ஒன்றன் பின் ஒன்றாக அடுக்கப்பட்ட சீட்டுக்கட்டுப் போல நிகழ்வுகள் ஒவ்வொன்றும் தொடர்ச்சியாக கட்டப்பட்டு அமைக்கப்படும் படைப்பு

சிறப்பானதாக அமையும். ஆத்தங்கரை நாவலின் தொடக்கம் நதி, கிராமத்தின் இயற்கை அழகு பற்றிய வர்ணனையுடன் அமைந்துள்ளது. அணைக்கட்டுவது என்ற அரசின் திட்டம், அழகிய சித்தூர் கிராமத்தையே புரட்டிப் போடுகின்றது. அதனை எதிர்த்துப் போராடி அந்த மண்ணிலேயே தனது உயிரைத் தியாகம் செய்யும் கோவிந்த பாய், மண்ணைக் காக்க தந்தை வழியில் களம் காணும் *சிமன்*, இவர்கள் காட்டும் வழியில் போராட்டத்தில் பங்கேற்கும் ஊர் மக்கள் எனக் கதையோட்டம் பின்னப்பட்டுள்ளது. மக்களின் போராட்டம் வெற்றி பெறவில்லை. அணை கட்டி முடிக்கப்படுகின்றது. இருப்பினும் நாவலின் முடிவில்,

> **"இதுதான் இந்தியாவில் கட்டப்படுகின்ற கடைசி பெரிய அணையாக இருக்கும். இன்னொரு பெரிய அணை இந்த நாட்டில் உருவாகாது"** [176]

என்னும் கூற்றால் அந்தப் போராட்டம் சித்தூர் என்ற கிராமத்தைக் கடந்து தேசம் முழுமைக்கான கிராம அழிப்பிற்கு முற்றுப்புள்ளி வைக்கும் வெற்றியைக் காட்டுகின்றது.

மரணம், மரணமிலா வாழ்வைத் தேடி பயணம், சலனம் என்ற மூன்று பிரிவுகளைக் கொண்டதாய் "சாகாவரம்" நாவல் அமைகின்றது. நாவலின் முதல் பகுதியான மரணம் என்பதில் நசிகேதனின் வாழ்வில் அவனுக்கு நெருக்கமான மனிதர்களின் அடுத்தடுத்த மரணங்களையும் மரணபயத்தையும் அலசுகின்றது. அதனைத் தொடர்ந்து மரணம் இல்லா வாழ்வு வாழ்வதற்கான தேடலின் பயணமும் அத்தகைய இடத்தை அடைந்ததும் ஏற்படும் சலனமும் இடம் பெறுகின்றன.

மரணம் என்ற சொல்லைச் சந்தித்திராத, மரணம் என்று சொன்னவுடன் பயத்தின் பிடியில் சிக்கி, பித்துப் பிடித்த மனநிலையில் இருக்கும் எவரையும் கைபிடித்து *அவ்வுலகத்திற்குள்* அழைத்துச் செல்கிறார் இறையன்பு. மரணத்தைச் சரியான பொருளில் அறிமுகம் செய்கிறார். மரணம் நிகழ்ந்தே தீரும் என்ற உண்மையை தம்புனைவு கொண்டு புரிய வைக்கிறார் இறையன்பு.

## 7.7. மொழி நடை

தான் சொல்லக் கருதும் செய்திகளை மக்களுக்குப் புரியும் விதமாக எடுத்துக் கூறும் உத்திகளில் மொழி நடையும் ஒன்று. கருத்தைத் தெளிவாக விளக்க அடிப்படையானது மொழி. உணர்த்தும் திறனை அடிப்படையாகக் கொண்டது மொழிநடை. மொழிநடை, என்பது "படைப்பாளரின் உள்ளத்தையும் உணர்வையும் காட்டும் கண்ணாடி என்பர். மொழி நடை எழுச்சியும் வீழ்ச்சியும் மிக்கதாய் இருக்க வேண்டும்" என்பார் அறிஞர் பிளவர். கருத்துகள் எண்ண வடிவிலும்,

அனுபவங்கள் உணர்ச்சி வடிவிலும் மூளை, கண், நெஞ்சங்களில் தேங்கி நிற்கின்றன. காலச் சூழலுக்கு ஏற்ப மொழிநடை அமைவது சிறந்தது.

நாவலின் மொழிநடை எழுத்து வழக்கு, பேச்சு வழக்கு ஆகிய இரண்டும் கலந்து எழுதப்பட்டுள்ளது. வர்ணனைகள் வருமிடத்தில் எழுத்து வழக்கும், உரையாடல் வருமிடத்தில் பேச்சு வழக்கும் பயன்படுத்தப்பட்டுள்ளன. தேவையான இடங்களில் வட்டார வழக்கும் பயன்படுத்தப்பட்டுள்ளது. நாவலில் ஆங்கிலச் சொற்களும் தொடர்களும் தவிர்க்க முடியாத நிலையில் பயன்படுத்தப்பட்டுள்ளன.

வியர்த்தம், பூடகம், நிசப்தம், ரம்யம், ஜீவிதம், ஜ்வாலை, சமிக்ஞை போன்ற சொற்கள் சாகாவரம் நாவலில் திரும்பத் திரும்ப வருகின்றன. இடத்திற்கு ஏற்றபடி சில சொற்களை எந்த மொழியிலிருந்து வந்தது என்று பாராமல் பயன்படுத்துவது ஓர் அழகு. வடமொழிச் சொல்லாக இருந்தாலும் தூய தமிழ்ச் சொல்லாக இருந்தாலும் இடமறிந்து பயன்படுத்தும் அழகை நாம் உணர வேண்டும் எனும் நோக்கத்தில் அவற்றை இறையன்பு கையாண்டு இருக்கிறார்.

ஆத்தங்கரை நாவலை வாசிக்கும் பொழுது ஒருவித அவலச்சுவையைப் பல இடங்களில் உணர முடிகின்றது. கோவிந்தபாய் ஓரிடத்தில் "அங்க பாரு! நான் மட்டுமில்லை. என்னோட பாட்டனாருங்கூட அங்க காஞ்சி கிடக்குதே அந்த ஆலமரத்துல ஊஞ்சல் கட்டி விளையாடியிருக்காராம்" என்று கூறுவதும்,

**"எங்க வீட்டுக்கு முன்னால் இருக்கும் அந்த மரத்தடியில்**
**கட்டிலைப் போட்டுக் கொண்டுதான் உட்காருவார்**
**அவருக்கு அந்த மரம் அவ்வளவு பிடிக்கும். அதில்**
**ஒரு கயிற்றைக் கட்டக் கூட அனுமதிக்கமாட்டார்.**
**ஆனால் இப்ப அந்த மரமும் இல்லை. அவரும் இல்லை"**[177]

என்று சிமன் கூறுவதும் ஒருவித கையறுநிலையைக் காட்டுகிறது.

சாகாவரத்தில் மரணம் பற்றிய செய்தியை வட்டார வழக்கில் சொல்கிறார் இறையன்பு.

**"என்னப்பா! வரவர உன்னோட போக்கே சரியில்லை. இப்படி**
**எதுக்கெடுத்தாலும் இடிஞ்சி போனா என்ன பண்ணமுடியும். நம்ம**
**கையில என்ன இருக்கு. நாளைக்கு நாங்க போனாலும்**
**ஆச்சிரியப்படறதுக்கு ஒண்ணுமில்லை. நீ திடமா வாழப் பழகிக்கணும்.**
**கடலுக்குள் மீன் பிடிக்கறவங்க எப்ப வேணுமின்னா செத்துப்**

**போவமுன்னு தெரிஞ்சித்தான போறாங்க. நம்ப வாழ்க்கையும் அந்த மாதிரி தான். யாருக்கு வேணா எப்ப வேணா சாவு வரலாம்"** [178]

என்று நசியின் பெற்றோர் கூறுவதைச் சுட்டிக்காட்டும் ஆசிரியர், அது எல்லாருக்கும் பொதுவானதே என்று வலியுறுத்துகின்றார்.

## 7.8. படைப்பில் உத்திகள்

வாசகரே, படைப்பாளருக்கும் அவரின் படைப்புக்கும் மையப் புள்ளியாக அமைகின்றார். எந்தப் படைப்பும் வாசகனுக்காகவே படைக்கப்படுகின்றது. வாசகனின் மனதைக் கவர பலரும் பல உத்திகளைக் கையாள்வதுண்டு. ஆத்தங்கரை ஓரத்தில் சமூகப் பிரச்சனையை மையமாக வைத்து சொல்லப்பட்டது சிறந்த உத்தி. எந்த மனிதனும் நீண்டநாள் வாழவே ஆசைப்படுவான். "*மரணமிலா வாழ்வு*" எனும் வரம் தேடி அலையும் பயணமும், தேடலின் பயனும் மிகுந்த எதிர்பார்ப்புடன் சாகாவரத்தில் தீட்டப்பட்டுள்ளது. அது வாசகரின் தேடலுக்குத் தீனிபோடுவதாய் அமைகின்றது. சொர்க்கம், நரகம் பற்றி சிறுவயது முதலே சொல்லி வளர்க்கப்படும் சூழலில் மேலுலகம் எப்படி இருக்கும் என்ற ஆவலைத் தூண்டும் விதத்தில் அவ்வுலகம் நாவலை அமைத்தது இறையன்புவின் தனிஉத்தி.

### 7.8.1. உரையாடல் உத்தி

மேலுலகத்தில் இருக்கும் நிர்வாகியிடம் திரிவிக்ரமன் நிகழ்த்தும் *சொர்க்கம், நரகம்* குறித்த உரையாடல் சுவையானது. எனக்கிருக்கும் சந்தேகம் சொர்க்கம், நரகம் பற்றியது. சொர்க்கம் எப்படியிருக்கும்? நரகம் எப்படியிருக்கும்? என வினவும் சிந்திக்கிறவனிடம்,

> **"நீங்களெல்லாம் நினைப்பது போலத்தான் முதலில் சொர்க்கம், நரகம் என்றெல்லாம் பிரித்தோம். ஆனால் சொர்க்கத்தையே நரகமாக நினைத்து உடல் முழுவதும் ஒவ்வாமை வளர்த்துக் கொண்டவர்களும் உண்டு. நரகத்தையே சொர்க்கம் என நினைத்து நன்றி சொன்னவர்களும் உண்டு. எனவே அவரவர் சொர்க்கம் அவரவர் கையில்"** [179]

என்று மேலுலக நிர்வாகி கூறுவதாக இறையன்பு குறிப்பிடுகின்றார்.

### 7.8.2. பெட்டிச் செய்தி – உத்தி

நடைமுறை வாழ்க்கையில் எதார்த்தங்களை அப்பட்டமாகக் காட்டும் ஆத்தங்கரை ஓரம் நாவலில் ஆசிரியரின் சமூக அக்கறை நாவல் முழுவதும் ஆழமாக

வெளிப்படுகின்றது. நாவலின் பக்கங்களில் இடைஇடையே முக்கிய கருத்துப்பதிவுகளைக் கட்டங்களில் அடுக்கிக் காட்சிக்கு வைத்த முறைமை சிறப்பானது.

**"எந்தப் பொருளும் இழக்கப்படும் வரை உணரப்படுவதில்லை.**
**இழந்து விடுவோம் என்னும் நிலையில்தான் உயிர்கூட**
**பிரம்மாண்டமானதாய் உருவெடுத்து நிற்கிறது."** [180]

**"தனக்கென்று தனியொரு உலகத்தை சிருஷ்டித்து, அதைக்**
**கெட்டியாகப் பிடித்துக் கொண்டிருக்காமல் இருப்பவர்களால்தான்**
**எல்லா உலகத்திலும் ஐக்கியமாகி விடமுடியும்.**
**அதனிலிருந்து எந்தப் பாதிப்புமில்லாமல் பிரிந்து செல்லவும் முடியும்"** [181]

காட்சிகளுக்கு இடையே நம்மை நிதானப்படுத்தி சிந்திக்க வைக்க *பெட்டிச் செய்தி* என்னும் உத்தியை ஆசிரியர் கையாண்டுள்ளார். ஆசிரியர் கதாப்பாத்திரங்கள் பேசும் மொழியில் எதார்த்தத்தைக் கையாண்டுள்ளார்.

**"வெள்ளையும் சொள்ளையுமாய்" இருக்கிற அத்தனை பேருமே,**
**மக்களுக்கு அதிகாரிகளாகத் தான் பட்டார்கள்"** [182]

என்று குறிப்பிடும் பொழுதும்

**"நாங்கள் இருக்கிற ஆறு, காடு, பறவை, தண்ணீர், மீனு,**
**ஆகாசம் எல்லாத் தோடயும் ஒன்னாக் கலந்து வாழறவங்க".** [183]

என்று குறிப்பிடும்பொழுதும் பழங்குடி மக்களின் இயல்பான எதார்த்த நடை வெளிப்படுகின்றது. "இப்பொழுதே அந்தப் பகுதி முழுவதும் சவக்களை வந்து விட்டிருந்தது" என்றும் கடுதாசி, கண்ணாலம் போன்ற வட்டார வழக்குச் சொற்களைக் கையாண்டிருப்பது நாவலில் எதார்த்தத்தைக் காட்டுகின்றது.

## 8. தொகுப்புரை

- ❖ ஆளுமை சிந்தனை மிக்கோர் மத்தியில் சிந்தனை ஆளுமை மிக்க இறையன்பு அவர்களின் எண்ணமும் எழுத்தும் ஒன்றாகவே அமைந்துள்ளது. இவரின் ஆளுமையின் அடித்தளம் இவரது தந்தையே!
- ❖ இறையன்பு, அவரது வாழ்க்கை அனுபவத்தை, படித்த செய்திகளைத் தன் எண்ணத்தோடு கலந்து படைப்பாக்கி, படிப்போர் மனதில் விதைகளாகத் தூவியுள்ளார்.

- சொல்ல வரும் கருத்தை பிறர் மனங்கொள்ளும் வகையில் எளிய எடுத்துக்காட்டுகள், கதைகள், வாழ்வியல் நிகழ்ச்சிகள் மூலம் எடுத்துரைக்கும் விதத்திலிருந்து இவரின் அறிவின் ஆழம் புலப்படுகின்றது.
- இறையன்பு ஆட்சிப் பணியில் இருப்பதாலும் பலதரப்பட்ட மனிதர்களைச் சந்திப்பதாலும் இவரின் சிந்தனை மக்களை மையப்படுத்தியே செல்கின்றது.
- போலியான புகழ்ச்சி வார்த்தைகளுக்கு மயங்காமல் சாமர்த்தியமாக இருக்கும் பொழுதே பெண்களுக்கான விடுதலை சாத்தியமாகும்.
- கொள்கை பிடிப்புடன் உண்மையாய் இருப்பதன் மூலமே இன்றைய அரசியலில் தூய்மையை உண்டாக்க முடியும்.
- சிக்கலைக் கண்டு ஓடி ஒளியாத இளைய சமுதாயம் உருவாகும்பொழுதே ஒளிமயமான நாட்டை உருவாக்க முடியும்.
- ஒற்றுமையை உருக்குலைத்து வேற்றுமையை வளர்த்து வரும் சாதியத்தை அழிக்கும்பொழுதே வளர்ச்சியின் படிக்கட்டுகளில் நாம் காலெடுத்து வைக்க இயலும்.
- வறுமையை விரட்டியடிக்கும்பொழுதே ஒரு சராசரி இந்தியனுக்குப் போலித்தனமில்லாத இயல்பான வாழ்க்கை கிடைக்க வழி ஏற்படும்.
- நேர்மையான நடத்தை, உண்மை உழைப்பு, கருணையும் அன்பும் இயைந்த வாழ்வு, நாட்டின் பொருளாதார மேம்பாட்டுக்கான பங்களிப்பு, ஒவ்வொரு நொடியையும் ஆக்கபூர்வமாய்ச் செலவிடுவது, விழிப்புணர்வுடன் இயங்குவது போன்றவை இறையன்புவின் கட்டுரைகள் கற்றுக் கொடுக்கும் வாழ்வியல் நெறிகளாகும்.
- மொழிக்கு அப்பாலும் கவிதை தனது, வேர்களைச் செலுத்த முடியும் என்பதை உணர்ந்த கவிஞர் இறையன்பு, உலக மொழியான காதலைப் புதிய பரிமாணத்தில் அணுகுகின்றார்.
- கவிதையின் எல்லா பரிமாணங்களையும் தொட்டுச் செல்லும் இறையன்பு "ஹைக்கூ" என்பதற்கு "கிளிஞ்சல்" என்றும் "உணர்வு இலக்கியம்" என்றும் பொருள் கூறுகிறார். அழிவல்ல ஆக்கமே ஹைக்கூவின் நோக்கம் என்பதைப் பதியவைத்துள்ளார்.

- இறையன்பு இயற்கையையும் மக்கள் வாழ்வியலையும் பல்வேறு கண்ணோட்டத்தில் அணுகி ஆராய்ந்து அழகியல் உணர்வோடு படைப்புகளாக்கியுள்ளார்.
- இயற்கை விரும்பியான இறையன்பு படிமம், குறியீடு, அங்கதம், முரண் என்ற பல்வேறு நிலைகளில் தமது எண்ணத்தைப் படைப்பின் வழி வெளிப்படுத்தியுள்ளார்.
- காட்சிகளின் மூலம் நமக்கு அரிய செய்திகளைத் தருவதே படிமத்தின் சிறப்பு. சொல்லவரும் பொருளின் உண்மைத் தன்மையை அதையொத்த இன்னொரு பொருளின் துணை கொண்டு விளக்கும் உத்தியே குறியீடு.
- நகைச்சுவை வழியே சிந்தனையைத் தூண்ட "அங்கத உத்தியைப்" பயன் படுத்தும் இவரது படைப்புகளில், உவமை, உருவகம், இயைபு, மோனை, எதுகை, சொல்லாட்சி, இணையெதிர் சொற்கள் போன்ற மேலும் பல கூறுகளும் அமைந்துள்ளன. அவை இவரது மொழி ஆளுமையைப் பறைசாற்றுகின்றன.
- நசிகேதன், சிரஞ்சீவி, சுதீர், திரிவிக்ரமன், கங்கா என வேறுபட்ட கதாப்பாத்திரங்களின் வழி இவரது இலக்கிய அறிவு புலப்படுகின்றது.
- சமுதாயத்திற்கு நன்மை தரக்கூடிய அணை கட்டுதல், கோவில் அமைத்தல் போன்ற செயல்களில் ஈடுபடும்பொழுது தொலைநோக்குப் பார்வையும் சுற்றுச்சூழல் சிந்தனையும் இன்றியமையாதது.
- எந்த உயிரையும் காயப்படுத்திவிடக் கூடாது என்ற உணர்வைச் சுமந்து, அரிதாகப் புதைந்திக்கும் மனித உணர்வுகளைப் படம் பிடித்துக் காட்டும் காலக் கண்ணாடியாக இவரது படைப்புகள் விளங்குகின்றன.

## அடிக்குறிப்புகள்

1. வைகை மீன்கள், வேலாயுதம். மு., பதிப்புரை
2. இறையன்பு படைப்புலகம் I ,சீனிவாசன். நம்., ப.177
3. இறையன்பு படைப்புலகம் III ,சீனிவாசன். நம்., ப. 180
4. திருப்பாவைத் திறன்,இறையன்பு.வெ., ப. 37
5. மேலது , ப. 35
6. மேலது, ப. 105
7. வாழ்க்கையே ஒரு வழிபாடு,இறையன்பு.வெ., ப. 156
8. உள்ளொளிப் பயணம், இறையன்பு.வெ., ப. 285
9. திருக்குறள், திருவள்ளுவர், எண். 942
10. வாழ்க்கையே ஒரு வழிபாடு,இறையன்பு.வெ., ப. 29
11. திருப்பாவைத் திறன் ,இறையன்பு.வெ., ப. 15
12. மேலது, ப. 15
13. வாழ்க்கையே ஒரு வழிபாடு,இறையன்பு.வெ., ப. 86
14. திருப்பாவை , பா.22
15. வாழ்க்கையே ஒரு வழிபாடு,இறையன்பு.வெ., ப. 93
16. மேலது, ப. 73
17. உள்ளொளிப் பயணம் ,இறையன்பு.வெ., ப. 255
18. மேலது, ப. 234
19. மேலது, ப. 279
20. வாழ்க்கையே ஒரு வழிபாடு ,இறையன்பு.வெ., ப. 159
21. மேலது, ப. 155
22. மேலது, ப. 155
23. மேலது, ப. 48
24. மேலது, ப. 27
25. ஏழாவது அறிவு III இறையன்பு.வெ., ப. 97
26. மென்காற்றில் விளை சுகமே,இறையன்பு.வெ., ப. 127
27. வாழ்க்கையே ஒரு வழிபாடு,இறையன்பு.வெ., ப. 97
28. மேலது, ப. 43
29. ஏழாவது அறிவு III இறையன்பு.வெ., ப. 109
30. வாழ்க்கையே ஒரு வழிபாடு ,இறையன்பு.வெ., ப. 18
31. ஓடும் நதியின் ஓசை II இறையன்பு.வெ., பக் 133-134

32. நெஞ்சைத் தொட்டதும் சுட்டதும் ,இறையன்பு.வெ., ப.24
33. வாழ்க்கையே ஒரு வழிபாடு,இறையன்பு.வெ., ப. 78
34. ஏழாவது அறிவு IIஇறையன்பு.வெ., ப. 134
35. ஓடும் நதியின் ஓசை I இறையன்பு.வெ., ப. 33
36. ஏழாவது அறிவு III இறையன்பு.வெ., ப. 134
37. வேடிக்கை மனிதர்கள், இறையன்பு.வெ., ப. 152
38. மேலது, ப. 171
39. ஓடும் நதியின் ஓசை I இறையன்பு.வெ., ப. 164
40. ஓடும் நதியின் ஓசை IIஇறையன்பு.வெ., ப. 33
41. தொல்காப்பியம், நூற்பா எண்.1823
42. ஏழாவது அறிவு I , இறையன்பு.வெ., ப. 148
43. திருப்பாவைத் திறன், இறையன்பு.வெ., ப. 45
44. மேலது , ப. 59
45. ஓடும் நதியின் ஓசை II, இறையன்பு.வெ., ப. 104
46. திருப்பாவைத் திறன், இறையன்பு.வெ., ப. 57
47. மேலது, ப. 19
48. நரிப்பல், மரண தண்டனை, இறையன்பு.வெ., ப. 13
49. மேலது, எல்லாம் அவன் செயல், ப. 42
50. நரிப்பல், இறையன்பு.வெ., ப. 72
51. மேலது, ரத்த சம்பந்தம், ப. 101
52. ஏழாவது அறிவு III, இறையன்பு.வெ., ப. 169
53. ஓடும் நதியின் ஓசை II, இறையன்பு.வெ., ப. 73
54. மேலது, ப. 193
55. ஏழாவது அறிவு III,இறையன்பு.வெ., பக் 48-49
56. மேலது, பக். 68-69
57. புதுக்கவிதைத் திறன் , மோகன். இரா.,ப. 10
58. இலக்கிய வரலாறு, ஸ்ரீ சந்திரன் , ப.322
59. வாய்க்கால் மீன்கள், இறையன்பு.வெ., ப. 11
60. குயில் பாட்டு , பாரதியார், ப.292
61. தொல்காப்பியம், நூற்பா எண்.971
62. வாய்க்கால் மீன்கள், இறையன்பு.வெ., ப. 7
63. மேலது, ப. 49

64. மேலது, ப. 12

65. வைகை மீன்கள், இறையன்பு.வெ., ப. 47

66. மேலது, ப. 156

67. வாய்க்கால் மீன்கள், இறையன்பு.வெ., ப. 53

68. வைகை மீன்கள், இறையன்பு.வெ., ப. 120

69. சறுக்கு மரம் ,காதல், இறையன்பு.வெ., பக். 54,55

70 மேலது, ப. 56

71. முகத்தில் தெளித்த சாரல், இறையன்பு.வெ., ப. 18

72· மேலது, ப. 42

73· மேலது, ப. 54

74· திருக்குறள், திருவள்ளுவர், எண்.645

75. மேலது, எண். 643

76. வைகை மீன்கள், இறையன்பு.வெ., ப.28

77. மேலது, ப.37

78. மேலது, ப. 38

79. மேலது, ப. 121

80. மேலது, ப.44

81. மேலது.

82. மேலது, ப. 53

83 மேலது, ப. 58.

84· மேலது, ப.106

85· மேலது, ப. 123

86· வாய்க்கால் மீன்கள், இறையன்பு.வெ., ப. 69

87. சறுக்கு மரம், காத்திருத்தல், இறையன்பு.வெ., ப. 3

88. மேலது, உதிராத மலர்கள், ப. 25

89. மேலது, விளையாட்டு, ப. 30

90. வைகை மீன்கள், இறையன்பு.வெ., ப. 66

91. மேலது, ப. 124

92. மேலது, ப. 154

93. மேலது, ப.46

94· வாய்க்கால் மீன்கள் ,இறையன்பு.வெ., ப. 8

95. மேலது, ப. 39

96. மேலது, ப. 69
97. வைகை மீன்கள், இறையன்பு.வெ., ப.93
98. மேலது, ப. 25
99. வாய்க்கால் மீன்கள் ,இறையன்பு.வெ., ப.27
100. சென்னைப் பல்கலைக்கழக ஆங்கிலம் தமிழ் பேரகராதி. ப. 516
101. பூபாளத்திற்கொரு புல்லாங்குழல் ,வாக்காளர்கள், இறையன்பு.வெ., ப. 49.
102. மேலது, தன்மானத்தின் விளிம்பில், ப. 105
103. மேலது, விழியில் ஒரு நீரூற்று, ப. 100
104. மேலது, நிறவெறிக்குக் கறுப்புக் கொடி, ப.15.
105. மேலது.
106. மேலது, திட்டம், ப. 30
107. மேலது, அகலாத அழுக்குகள், ப. 3
108. மேலது, நார்களே கர்வப்படுகின்றன, ப. 12
109. மேலது, தன் பங்குக்கு, ப.29
110. மேலது, மௌனிகள் ஊமைகளல்ல, ப. 34
111. மேலது, வண்ணத்துப்பூச்சி கூட்டுப்புழுவாய், ப. 76
112. சறுக்கு மரம் , கண்ணீர், இறையன்பு.வெ., ப. 130
113. மேலது, இசையால் இணைவோம், ப. 115
114. வைகை மீன்கள், இறையன்பு.வெ., ப. 125
115. மேலது, ப.112
116. பூபாளத்திற்கொரு புல்லாங்குழல் நிறவெறிக்குக் கறுப்புக்கொடி, இறையன்பு.வெ., ப. 15
117. வாய்க்கால் மீன்கள், இறையன்பு.வெ., ப.26
118. சறுக்கு மரம், நூலகம், இறையன்பு.வெ., ப. 62
119. பூபாளத்திற்கொரு புல்லாங்குழல், மௌனிகள் ஊமைகளல்ல, இறையன்பு.வெ., ப 37.
120. மேலது, ஒரு கல்லின் கவிதை, ப. 62
121. சறுக்கு மரம், மரகத மரங்கள், இறையன்பு.வெ., ப. 153
122. மேலது, வைராக்கியத்தாலே வைரமாவோம், ப. 141.
123. வைகை மீன்கள், இறையன்பு.வெ., ப.37
124. பூபாளத்திற்கொரு புல்லாங்குழல், தற்கொலை, இறையன்பு.வெ., ப. 59
125. மேலது, உன்னிலிருந்து தொடங்கு, ப. 60

126. மேலது, மரணம் தந்த ஜனனம், ப. 79
127. சறுக்கு மரம், தவழ்ந்தோம் மகிழ்ந்தோம், இறையன்பு.வெ., ப. 8
128. மென்காற்றில் விளைசுகமே, இறையன்பு.வெ., ப.74
129. வைகை மீன்கள், இறையன்பு.வெ., ப.25
130. பூபாளத்திற்கொரு புல்லாங்குழல், இந்தப் புல்லாங்குழல் ஒரு பூபாளத்திற்காக, இறையன்பு.வெ., ப. 46
131. வாய்க்கால் மீன்கள், இறையன்பு.வெ., ப. 11
132 மேலது, ப. 23
133. வைகை மீன்கள், இறையன்பு.வெ., ப. 102
134. மேலது, ப. 138
135. மேலது, ப. 150
136. மேலது, ப. 58.
137. மேலது, ப. 91
138. இலக்கிய வரலாறு, பூவண்ணன் , பக்.385
139. இறையன்பு படைப்புலகம் I , ப.116
140. அரிதாரம், இன்னுமோர் இரவு, இறையன்பு.வெ., ப. 41
141. மேலது, திருச்சிற்றம்பலம், ப. 132
142. மேலது, சுயம், ப. 31
143. மேலது, அழுக்கு, ப. 47
144. மேலது, தலைமாணாக்கன், ப. 8
145. மேலது, விசிட், ப.70
146. அழகோ அழகு, எட்டாவது மலைப்படைப் பிரிவு, இறையன்பு.வெ., ப. 7
147. மேலது, கைமுறுக்குக்காரி, இறையன்பு.வெ., ப.16
148. திருக்குறள், திருவள்ளுவர், எண்.56
149. பூனாத்தி, வரம் தரவேண்டும், இறையன்பு.வெ., ப. 96
150. மேலது, உயிர்த்தெழுதல், ப. 101
151. நரிப்பல், விடுதலை, இறையன்பு.வெ., ப. 9
152. மேலது, தணிக்கைத்தடை, ப. 74
153. மேலது, ப. 75
154. சின்னச் சின்ன மின்னல்கள் , இறையன்பு.வெ., ப. 16
155. மேலது, ப. 48, வரி 1-2
156. மேலது, ப. 62, வரி 1

157. மேலது, ப. 62, வரி 3

158. மேலது, ப. 62, வரி 12-14

159. மேலது, ப. 54, வரி 15

160. மேலது, ப. 58, வரி 12-13

161. மேலது, ப.45, வரி 1

162. மேலது, ப. 182, வரி 5

163. மேலது, ப. 78, வரி 3-5

164. மேலது, ப. 174, வரி 5-6

165. மேலது, ப.2, வரி 2

166. மேலது, ப. 2, வரி 5

167. மேலது, ப. 2, வரி 7

168. இறையன்பு படைப்புலகம் I, சீனிவாசன்.நம்., ப. 305

169. இறையன்பு படைப்புலகம் III ,சீனிவாசன்.நம்., ப., ப. 72

170. தமிழில் சமூக நாவல்கள் , வீராசாமி. தா.வே. ,ப. 4

171. இலக்கிய மரபு , வரதராசனார்.மு., பக். 105-106

172. இணையதளம், www.iraianbu.in

173. சாகா வரம், இறையன்பு.வெ., ப.3

174. அவ்வுலகம், இறையன்பு.வெ., ப. 49

175. மேலது, ப. 38

176. ஆத்தங்கரை ஓரம், இறையன்பு.வெ., ப. 203

177. மேலது, ப. 194.

178. சாகாவரம், இறையன்பு.வெ., ப. 33

179. அவ்வுலகம், இறையன்பு.வெ., ப. 75

180. ஆத்தங்கரை ஓரம், இறையன்பு.வெ., ப. 8

181. மேலது, ப. 34

182. மேலது, ப. 5

183. மேலது, ப. 2